# தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2018

**தொகுப்பு**

திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**வெளியீடு**

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2018

தயாரிப்பு
திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

வெளியீடு:
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

த.பெ 1519, 2 ஆவது தளம்,
தொழில் செயலகம்,நாரஹேன்பிட்ட,கொழும்பு-05.

பதிப்பகம்:
Print Make (Pvt) Ltd.,
No. 241/41-A, Kirula Road,
Narahenpita, Colombo 05.
Tel: 0112 368 443 | 0112 590 477
E-mail: pmakeoffice@gmail.com

# தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2018

**பொருளடக்கம்** **பக்கம்**


- ❖ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களின் செய்தி. v
- ❖ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி vii
- ❖ அறிமுகம் 1

அமைச்சின் செயலாற்றுகை

| | | |
|---|---|---|
| I. | நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு | 7 |
| II. | திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 8 |
| III. | தொழில் மற்றும் வெளிநாட்டு தொடர்புகள் பிரிவு | 9 |
| IV. | நிதிப் பிரிவு | 11 |

அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| I. | தொழில் திணைக்களம் | 12 |
| II. | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 30 |
| III. | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 40 |
| IV. | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 42 |
| V. | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 47 |
| VI. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 49 |
| VII. | சிரம வாசனா நிதியம் | 54 |

புகைப்படம் - அமைச்சின் விசேட செயற்பாடுகள் **55**



**தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ. ரவீந்திர சமரவீர அவர்களின் செய்தி**

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள செயலாற்றுகை அறிக்கை 2018 இற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதற்கான வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

இந்த அமைச்சுடன் இணைந்திருக்கின்ற நிறுவனங்களான தொழில் திணைக்களம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சிரம வாசனா நிதியம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலம் போன்றவற்றினால் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் நிலையானவையாகும்.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, 2018 ஆம் ஆண்டில் தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறையில் நாடளாவியரீதியில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் நலன்புரிக் காக அதிகளவிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல், தொழில் பிணக்கு மற்றும் பணிப் பகிஷ்கரிப்பிற்குத் தீர்வு காண்பதில் அமைச்சு தலையிட்டு அதனூடாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையினை விரவுபடுத்து வதற்கான தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல், சர்வதேச தொழில் நியமங்கள், வேலையாளர் களின் நிருவாகம் மற்றும் நலன்புரி என்பவை தொடர்பில் கொள்கைகளை வகுத்தமைத்து நடை முறைப்படுத்துதல், தொழில் தொடர்புகள் குறித்த சட்டங்களை வரைதல் மற்றும் அவற்றினை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றை இந்த ஆய்வாண்டு காலப்பகுதியில் மேற்கொண்டிருந்தது.

தொழிலற்ற இளைஞர்களுக்கு தனியார் துறையில் தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்கு வழிகாட்டுவதற்காக தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியொன்றாக பதிவுசெய்கின்ற செயன்முறையினை இலகுபடுத்துவதற்காக நாட்டின் பல மாவட்டங்களிலும் தொழில்வாய்ப்பு சேவை நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் துறைகளின் அலுவலர்களுக்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினூடாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு பற்றி தொழில்தருநர்களுக்கு அதேபோன்று பணியாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

பயனுறுதிவாய்ந்த ஈடுபாடுள்ள அரச சேவைக்கு வழிசமைத்து, புதிய தொழில் அலுவலகங்கள் மற்றும் கட்டடங்கள் நிருமாணிக்கப்பட்டு, மக்களுக்கு கையளிக்கப்பட்டதுடன், சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல் மற்றும் வேலையாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துதல், சிறந்த வேலை நிபந்தனை களைப் பேணுதல் என்பவற்றை வலியுறுத்தி சர்வதேச நியமங்களுடன் சேவைகளைப் பேணுவதற்காக பல நகரங்களிலும் தற்போதிருக்கின்ற தொழில் அலுவலகங்கள் மற்றும் கட்டடங்கள் புதுப்பிக்கப் பட்டிருந்தன.

இந்த அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை 2018 ஆம் ஆண்டில் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.என்.ஏ.சரணதிஸ்ஸ அவர்களுக்கும் மற்றும் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்களுக்கும், பதவியினருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன்.

**ரவீந்திர சமரவீர**
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்



## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுச் செயலாளரின் செய்தி

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு மற்றும் அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் 2018 ஆம் ஆண்டு செயலாற்றுகை பற்றிய விபரங்களை வழங்குகின்ற இந்த அறிக்கைக்கு எனது நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை உணர்ந்துகொள்வதற்கு அனைத்து இலங்கையரின் பங்களிப்பும் அவசியமானதாகும். தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிற்கு குறித்தொதுக்கப்பட்ட பங்கு அளப்பரியது. நல்லாட்சி கொள்கைகளின் கீழ் வேலையாளர்களின் உரிமைகளைப் பலப்படுத்துவதற்கு கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அத்துடன் 2020 மற்றும் 2025 தொலை நோக்கினையும், கொள்கைக் கட்டுக்கோப்பினையும் ஆரம்பிக்க இந்த அமைச்சிற்கு முடிந்திருந்தது.

அமைச்சின் பணிப்பாணையை நிறைவேற்றுவதற்கு, இந்த அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களான தொழில் திணைக்களம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், சிரம வாசனா நிதியம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலம் போன்றவை 2018 ஆம் ஆண்டு ஆய்வாண்டு காலப்பகுதியில் அளிப்பரிய பங்கினை வகித்துள்ளன.

தற்போதிருக்கின்ற தேசிய மற்றும் சர்வதேச சமூகப் பொருளாதார விடயங்களுடன் இணங்கும் வகையில் தொழில் ஆலோசனைச் சபையை வலுப்படுத்துவதற்கும், தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் தொழில் உரிமைகளை நிலைநிறுத்துகின்ற அதேவேளையில் முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலைத் தோற்றுவிப்பதற்குமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மகப்பேற்று நன்மைகள் சட்டத்தின் முரண்பாடுகளை நீக்குவதனூடாக தனியார் துறையில் பணிபுரிகின்ற பெண்களுக்கு ஒவ்வொரு மகப்பேற்றுக்கும் 84 நாட்கள் மகப்பேற்று லீவினை வழங்கியமை மிகச்சிறந்த சாதனைகளில் ஒன்றாகும். ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், வேலையாளர் நட்டஈட்டுச் சட்டம், கடைகள் மற்றும் அலுவலக கட்டளைச்சட்டம் மற்றும் சிரம வாசனா நிதியச் சட்டம் ஆகியவற்றின மேவுகையை விரிவுபடுத்தும் நோக்கில் இவற்றைத் திருத்துவதற்கான செயற்பாடுகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

சேவை நிபந்தனைகளுடன் தொடர்புபட்டுள்ள அனைத்துச் சட்டங்களின் ஏற்பாடுகளையும் கூட்டிணைத்து தனித்த சட்டவாக்கமாக வரைவதற்கும், வீட்டு வேலையாளர்களுக்கு தொழில் சட்டவாக்கங்களின் சட்ட மேவுகையை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேபோன்று, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசிய கொள்கை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, அனைத்து அக்கறைதாரர்களின் பங்கேற்புடன், தேசிய ஒழுக்காற்று ஆணைக்குழுவினைத் தாபிப்பதனூடாக அதனை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பத் திணைக்களம், தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு இளம் தொழில்நாடுநர்களுக்கு வழிகாட்டலை வழங்குதல், தொழில்சந்தை நிகழ்ச்சித்திட்டங்களையும் பாடசாலைப் பிள்ளைகளுகளுக்கு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல், பெண்களை சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல், மற்றும் தொழில்களைப் பதிவு செய்வதற்கு அரச தொழில்வாய்ப்பு நிலையங்களைத் தாபித்தல் போன்றவை உள்ளங்கலாக பல எண்ணிக்கையிலான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. ஆய்வாண்டு காலப்பகுதியில் அம்பாறை சுற்றுலா பங்களா மற்றும் பொலநறுவை தொழில் ஆலுவலகம் போன்றவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்த துடன், மெஹேவரபியஸ கட்டடம் முழுமையான நிலையை அடைந்துள்ளது. அமைச்சினது செயற் பணியினையும், தொலை நோக்கினையும் மேலும் அர்த்தமுள்ளதாக்கி வேலையாளர்களின் பிரச்சினை களுக்கு தீர்வுகள் வழங்கமுடிந்திருந்தது.

மேற்கூறப்பட்டுள்ள தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும் வழங்கியிருந்த தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களுக்கும எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த அறிக்கையைத் தயாரித்திருந்த அமைச்சின் மேலதிக செயலாளருக்கும், அமைச்சின் ஒட்டுமொத்தப் பதவியினருக்கும், தொழில் ஆணையாளர் அதிபதி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் அதிபதி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, சிரம வாசனா நிதியத்தின் முகாமையாளர் மற்றும் இந்த நிறுவனங்களின் அனைத்து மட்டங்களிலுமிருக்கின்ற அலுவலர்கள் அத்துடன் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அமைச்சின் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

எஸ்.ஏ.நிமல் சரணதிஸ்ஸ
செயலாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

# தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் பிரதான குறிக்கோள்கள், இலங்கையின் பகுதியளவிலான அரசாங்க மற்றும் தனியார் துறை பணியாளர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சேவை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்தியையும், தொழில் ஆக்கத்திறனையும் அதிகரிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற தொழிற்றுறை அமைதி மற்றும் தொழில்தருநர் மற்றும் பணியாளர்களிடையிலான உறவு முறையைத் தாபிக்கின்ற கொள்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்பவையாகும். இந்த அமைச்சிற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் பரப்பானது, உழைக்கும் மக்களின் நலன்புரிக்காக காலத்திற்குக் காலம் வகுத்தமைக்கப்படுகின்ற தொழில் சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் பரந்துபட்டுக் காணப்படுகின்றது. இதன்படி, அமைச்சின் தொலை நோக்கு மற்றும் செயற்பணி பின்வருமாறமைகின்றது.


**தொலைநோக்கு**

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

**செயற்பணி**

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, உச்ச மனிதவலு பயன்பாடு, உற்பத்தித்திறன் மற்றும் சீரிய வேலையினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடைவதனை நாடிய பங்களிப்பு

**அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்**



### அமைச்சின் குறிக்கோள்கள்

- ❖ முத்தரப்பினை வலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர்கள், பணியாளர்களுக்கிடையிலான உறவினைப் பலப்படுத்துதல்.
- ❖ சர்வதேச நியமங்களுடன் இணங்குகின்ற சேவை நியமங்கள் மற்றும் வேலையாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- ❖ சிறுவரை மோசமான வகையில் வேலைக்கிடுதலை இல்லாதொழித்தல்.
- ❖ பெண் பணியாளர்களை வலுப்படுத்தலும் பாதுகாத்தலும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல்.
- ❖ தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.
- ❖ சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான உரிய முறையியலைத் தயாரித்தல்.

### அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள்

2015.09.21 மற்றும் 2018.05.12 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிகளுக்கு அமைவாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் செயற்பணிகள் பின்வருமாறு.

1. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயங்களுக்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் விடயங்களுக்கு ஏற்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார்செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. சர்வதேச தொழில் தர நியமங்கள், பணியாளர்ளின் நிருவாகம் மற்றும் நலன்புரி தொடர்பான கொள்கைகளைத் தயார்செய்வதும் நடைமுறைப்படுத்துவதும்.
3. சர்வதேச தொழில் ஸ்தாபனம் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புகளுடனான ஒத்துழைப்பை பேணுதல்.
4. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தும் முறையை நிருவகித்தல்.
5. தொழிற்றுறை உறவுகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்
6. தொழில் உறவுகள் சம்மந்தமான சட்டங்களை ஆக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்.
7. தொழில்சார் மற்றும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
8. தொழில் சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளில் உள்ள சகல தொழில் சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ளத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
9. தேசிய மனித வலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
10. தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினால் கட்டணம் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல்.
11. தொழிலற்ற பயன் காப்புறுதி திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகள்.
12. தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
13. தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கை நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளும் கண்காணிப்பும்.


**அமுல்படுத்தப்படுகின்ற பிரதான சட்டங்கள்**

1. 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம்.
2. 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்க கட்டளைச் சட்டம்
3. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நலன்கள் கட்டளைச் சட்டம்
4. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
5. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்
6. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
7. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் (சேவை, வேதனங்களை ஒழுங்கமைத்தல்) சட்டம்
8. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள்,இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தல் சட்டம்
9. 1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க கட்டணங்களை அறவிடும் தொழில் முகவர்கள் சட்டம்
10. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
11. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் சேவையை முடிவுறுத்தும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
12. 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பணியாளர் சபைச் சட்டம்
13. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டம்
14. 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம்
15. 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் நிறுவகச் சட்டம்
16. 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டம்
17. 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வேலையார்களின் ஆகக்குறைந்த தேசிய சம்பளச் சட்டம்
18. 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

## 2018.12.31 ஆம் திகதியன்று பதவியணி பற்றிய விபரம்

| நிறுவனம் | சிரேஷ்ட மட்டம் | | கனிஷ்ட மட்டம் | | இரண்டாவது மட்டம் | | கீழ் மட்டம் | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக் கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த் தப்பட்ட எண்ணிக்கை | அனுமதி க்கப்பட்ட எண்ணிக் கை | பணிக்க மர்த்தப் பட்ட எண்ணிக் கை | அனுமதி க்கப்பட்ட எண்ணிக் கை | பணிக்க மர்த்தப் பட்ட எண்ணி க்கை | அனுமதி க் கப்பட்ட எண்ணி க்கை | பணிக்க மர்த்தப்ப ட்ட எண்ணி க்கை | அனும திக்கப்ப ட்ட எண்ணி க்கை | பணிக்க மர்த்தப் பட்ட எண்ணி க்கை | அனுமதி க்கப்பட்ட எண்ணிக் கை |
| அமைச்சு அலுவலகம் | 21 | 13 | 05 | 4 | 80 | 49 | 41 | 25 | 147 | 91 | 56 |
| தொழில் திணைக்களம் | 210 | 150 | 668 | 514 | 1,762 | 1553 | 489 | 452 | 3129 | 2669 | 460 |
| மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் | 15 | 07 | 04 | 0 | 673 | 568 | 15 | 14 | 707 | 589 | 118 |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 09 | 03 | 13 | 07 | 18 | 06 | 05 | 03 | 45 | 19 | 26 |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 03 | 01 | 07 | 04 | 10 | 08 | 05 | 06 | 25 | 19 | 06 |
| வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 05 | 02 | 02 | 01 | 31 | 27 | 05 | 03 | 43 | 33 | 10 |
| சிரம வாசனா நிதியம் | 01 | 01 | 03 | 03 | 07 | 07 | 04 | 04 | 15 | 15 | 0 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 70 | 58 | 80 | 62 | 762 | 748 | 174 | 168 | 1086 | 1036 | 50 |
| மொத்த பதவியணி யின் எண்ணிக்கை | **334** | **235** | **782** | **595** | **3343** | **2966** | **738** | **675** | **5197** | **4471** | **726** |

## நிறுவனத்தின் கட்டமைப்பு
## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு



**நிதிசார் முன்னேற்ற பொழிப்பு - 2018.12.31 இலுள்ளவாறு**

| | நிறுவனம் | செலவினத் தலைப்பு | செலவினத்தின் வகை | தேசிய ஏற்பாடு (ரூ. 000*) தேசிய ஏற்பாடு (ரூ. 000*) | மொத்த செலவினம் (ரூ.000*) மொத்த செலவினம் (ரூ.000*) | மீதி (ரூ.000*) மீதி (ரூ.000*) | செலவின் விகிதம் % செலவின் விகிதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சு அலுவலகம் | 193 | மீண்டெழுவது | 207,527 | 163,404 | 44,123 | 78.7% |
| | | | மூலதனம் | 268,387 | 63,726 | 204,661 | 23.74% |
| 2 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | | மீண்டெழுவது | 12,000 | 11,851 | 149 | 98.8% |
| | | | மூலதனம் | 1,500 | 1,500 | 0 | 100% |
| 3 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | | மீண்டெழுவது | 6,000 | 4,179 | 1,821 | 69.7% |
| | | | மூலதனம் | 7,000 | 690 | 6,310 | 9.9% |
| 4 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | | மீண்டெழுவது | 33,400 | 33,077 | 323 | 99% |
| | | | மூலதனம் | 3,850 | 499 | 3,351 | 13% |
| | உப மொத்தம் | | மீண்டெழுவது | **258,927** | **212,511** | **46,416** | **82%** |
| | | | மூலதனம் | **280,737** | **66,415** | **214,322** | **23.65%** |
| 5 | தொழில் திணைக்களம் | 221 | மீண்டெழுவது | 1,619,100 | 1,614,474 | 4,626 | 99.7% |
| | | | மூலதனம் | 2,211,000 | 1,813,415 | 397,585 | 82.01% |
| 6 | மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் | 328 | மீண்டெழுவது | 352,655 | 348,771 | 3,884 | 98.89% |
| | | | மூலதனம் | 31,100 | 30,395 | 704 | 97.74% |
| | மொத்தம் | | மீண்டெழுவது | **2,230,682** | **2,175,766** | **54,916** | **97.53%** |
| | | | மூலதனம் | **2,522,837** | **1,910,225** | **612,612** | **75.71%** |
| | முழு மொத்தம் | | | **4,753,519** | **4,085,991** | **667,528** | **86%** |

**நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

இலங்கை, 2030 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதனூடாக சிறந்த அபிவிருத்தி மட்டத்தை அடைவதற்கு எதிர்பார்க்கின்றது. அந்த அபிவிருத்தி இலக்குகளில், இந்த அமைச்சு, ‘‘நீடித்துள்ள, சிறந்த மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி, நிறைவானதும், ஆக்கத்திறனுள்ளதுமான தொழில்வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் சீரிய வேலையை ஊக்குவித்து’’ 8 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு அதன் பங்களிப்பினைச் செய்ய வேண்டியிருக்கின்றது.

இலங்கை விரைவான அபிவிருத்திப் பாதையில் செல்லவேண்டுமானால், அனைவருக்கும் சீரிய வேலை என்பது ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். சுதந்திரமான, சமத்துவமான,பாதுகாப்பான மற்றும் கௌரவமான சூழலொன்றில் உழைக்கக்கூடிய தொழிலொன்றினைப் பெறுவதற்கு பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமத்துவமான வாய்ப்பினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வெறுமனே தொழில்களை உருவாக்குவது என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றல்ல, அவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தில் இருத்தல் வேண்டும். சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம் நான்கு தூண்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவையாவன,

- தொழில்வாய்ப்பு மற்றும் தேசிய ஆக்கத்திறனை உருவாக்குதலும் ஊக்குவித்தலும்.
- வேலையில் உரிமை
- சமூகப் பாதுகாப்பு
- சமூகக் கலந்துரையாடல்

இவற்றிற்கு மேலதிகமாக, 4 பிரதான தூண்களாக ஒவ்வொரு துறையும் பின்வருகின்ற விடயப்பரப்பினை உள்ளடக்கி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

1. ஆக்கத்திறனை ஊக்குவித்தல்
2. பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துதல்

இதன்படி, அமைச்சின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களும் சீரிய வேலைச் சூழலை தோற்றுவிப்பதற்காக பின்வருகின்ற முக்கிய விடயப்பரப்புகளை வலியுறுத்துகின்றன.

1. தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியம்
2. தொழில் நியமங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துதல்
3. பெண் வேலையாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்
4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
5. சமூகப் பாதுகாப்பு
6. தொழில் துறையுடன் தொடர்புட்ட கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

சர்வதேச தொழில் தாபனத்தின் ஒருங்கிணைப்புடன் வகுத்தமைக்கப்பட்ட சீரிய வேலை நிகழ்ச்சித் திட்டம், 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான நான்கு வருட காலப்பகுதிக்கான ''சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்'' என்பதாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு ''சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்'' தயாரிக்கப்பட்டு, சர்வதேச தொழில் தாபனம், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்தருநர்களின் பங்கேற்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

அமைச்சினால் ஆற்றப்பட்டுள்ள அனைத்துச் செயலாற்றுகைகளும், அனைவருக்கும் சீரிய வேலை என்பதையும், நாட்டில் தொழிற்றுறை அமைதி என்பதையும் மையப்படுத்தியிருந்திருந்தது. அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல், தொழிற்றுறையில் ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகளை நடத்துதல், வேலையாளர்களின் நலன்புரியினை செம்மைப்படுத்துதல் மற்றும் அறிவூட்டப்பட்ட தொழில் அணியொன்றினை உருவாக்குவதனூடாக நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல் போன்ற வற்றின் மூலம், சீரிய வேலை பற்றி உணர்ந்துகொள்வதற்கும், ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையிலான உறவினைப் பலப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கின்றன.

**<u>தொழில் சட்டவாக்கங்களை மீள ஒழுங்கமைத்தல்</u>**

தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச நிலைமைக்கு ஏற்றதாகவும், இலங்கையில் முதலீட்டுக்குச் சார்பான சூழலை உருவாக்குவதற்கும் தொழில்சட்டங்களை மீளாய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கையில், அமைச்சானது, உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப் பதற்குப் பிணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வருகின்ற செயற்பாடுகள் ஆற்றப்படவுள்ளன.

1. ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்துதல், பொருளாதாரத்தின் பங்குதார்களாக ஒட்டுமொத்த இலங்கை தொழிலணியையும் ஆக்கும் நோக்கில் சேவை நிபந்தனைகள் கூட்டணைக்கின்றது. இந்த முயற்சி, வெவ்வேறு சட்டவாக்கங்களுக்கிடையிலுள்ள ஒவ்வாமை மற்றும் முரண்பாடு களை நீக்குவதை இலக்காகக் கொள்வதுடன், முன்மொழியப்பட்ட சட்டமூலமொன்று தற்போது வரையப்படுகின்ற செயன்முறையிலிருக்கின்றது.

2. மகப்பேற்று லீவு தொடர்பான முரண்பாடுகளைத் திருத்துவதற்காக சட்டங்கள் திருத்தப் பட்டிருந்ததுடன், அனைத்து பெண் வேலையாளர்களும் 84 நாட்களுக்கு மகப்பேற்று லீவுக்கு உரித்துடையவர்கள்.

3. தொழில் புரியக்கூடிய வயது 14 வயதில் இருந்து 16 வயதாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

4. தொழிற்சாலைகளில் விரிவான பரிசோதனைகளை நடத்தும் நோக்கில் தொழிற்சாலைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

5. ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் காலத்தின் தேவைக்குப் பொருந்தும் வகையில் திருத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

6. பரந்த விடயங்களில் நலன்புரிச் செயற்பாடுகளை ஆற்றுவதற்கு சிரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

7. வீட்டு வேலையாளர்களுக்கு தொழில் சட்டங்களின் சட்டப் பாதுகாப்பினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

8. வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதன் மூலம் வேலையாளர்களுக்கு ஆகக்கூடிய நட்டஈட்டினை 550,000 முதல் 20,000,000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## அமைச்சின் செயலாற்றுகை

### 1. நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவு

நிருவாக அலகு, தாபன அலகு, மற்றும் ஊடக அலகு என்பன நிருவாகம் மற்றும் தாபனப் பிரிவிற்குள் உள்ளடக்கப்படுகின்றன.

இந்தப் பிரிவிற்கு, பொது நிருவாகம், பெற்று வழங்கல் செயற்பாடுகள், முகாமைத்துவம், பராமரிப்புச் செயற்பாடுகள், பயிற்சி, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் உள்ளடங்கலாக பல பொறுப்புக்கள் உரித்தளிக்கப்பட்டுள்ளன.

அமைச்சினதும், அமைச்சு அலுவலகத்தினதும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகள் தாபனப் பிரிவினால் ஆற்றப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக இந்தப் பரிவு, பாராளுமன்ற வினாக்கள், அரச மேன்முறையீட்டுக் குழு, ஆலோசனைக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொது மக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்லின வேண்டுகோள்களைக் கையாள்கின்றது.

இந்த அமைச்சினால் மற்றும் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களால் ஆற்றப்படு கின்ற செயற்பாடுகளைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் பல்வேறு ஊடக நிறுவனங் களினூடாக அவற்றினைப் பிரபல்யப்படுத்துகின்ற பொறுப்பிற்கு ஊடகப் பிரிவு பொறுப்புவாய்ந்ததாக விளங்குகின்றது.

| இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | 2018 ஆம் ஆண்டு இலக்கு | | 2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 ஆம் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி (ரூ.000) | பௌதீகம் | நிதி (ரூ.000) |
| 01. | அமைச்சின் உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் யூலை | 100% | 200 | உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களில் அமைச்சுப் பதவியினருக்கு பயிற்சியளிக்கின்ற நிகழ்ச் சித் திட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் முதலாவது கட்டம் 2018.10.04 ஆம் திகதி இடம் பெற்றிருந்தது.<br>தேசிய உற்பத்தித்திறன் விருதுகளை வென்ற நிறுவனத்திற்கு கல்விசார் சுற்றுலா நவம்பர் மாதத்தில் இரண்டு கட்டங்களாக ஒழுங்குபடுத் தப்பட்டிருந்தது. | 128.38 |
| 02. | யூலை வேலை நிறுத்தக் காரர்களுக்கான நிவாரண ஏற்பாடு | - | - | 65 வயதினை அடைகின்ற 704 யூலை வேலை நிறுத்தக்காரர்களுக்கான கொடுப்பன வினை (ஒவ்வொரு வருக்கும் 250,000) மேற் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளன. | 29,750 |

## 2. திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான திட்டங்களை சரியான இலக்குகளை நோக்கித் தயாரித்தல், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். இதற்கு மேலதிகமாக பின்வருகின்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற அபிவிருத்தி பணிகளை உள்ளடக்கியிருக்கின்ற வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை உரிய தரப்பினருக்குப் பணித்தல்.

❖ வரவுசெலவுத்திட்ட அடிப்படையிலற்ற வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்து, நடைமுறைப்படுத்தி அதனூடாக மாதாந்த முன்னேற்ற மீளாய்வுகளை நடத்துதல்.

2. 2015 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு நியதிகளின்படி சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ, கண்காணிப்புத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுகை அறிக்கைகளை மாதாந்தம் மற்றும் காலாண்டில் சமர்ப்பித்தல்.

❖ 2017 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.

❖ இலங்கை தொழில் செய்திமடலைப் பிரசுரிப்பது தொடர்பிலான அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல்.
கீழே மீளாயப்பட்டுள்ள காலப்பகுதி தொடர்பில் தொடர் இல.69 இன் தொகுதி I, II & III காலாண்டின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

❖ 09 ஆராய்ச்சித் தாள்கள் பெறப்பட்டுள்ள தொழிற்றுறை பற்றி புலமைக் கருத்தரங்கிற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் தெரிவுசெய்யப்பட்ட 06 தொடர்பில் முழுமையான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதுடன் கருத்தரங்கினை 2018 நவம்பர் 29 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்படுகின்றது.

❖ பதுளை மாவட்டத்தின் தொழிலாளர் சமூகத்தின் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக செப்ரெம்பர் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் விசேட நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டிருந்தது. சுமார் 2000 இற்கும் அதிகமானோர் இதில் பங்குபற்றியிருந்தனர்.

❖ "Understanding Labour Law" புத்தகத்தின் மூன்றாவது பதிப்பு தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

❖ சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வருகின்ற நிறுவனங்களுக்கு 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**2018 12.31 இலுள்ளவாறு சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| நிறுவனங்கள் | தேறிய ஏற்பாடு | செலவினங்கள் | எஞ்சியிருக்கின்ற ஏற்பாடு | செலவினம் வீதத்தில் |
|---|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 6,098,800 | 5,965,635 | 133,165 | 94% |
| மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 3,733,000 | 3,275,000 | 458,000 | 88% |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 1,000,000 | 1,000,000 | - | 100% |
| தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் | 300,000 | - | 300,000 | - |
| வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 2,000,000 | 1,037,400 | 962,600 | 52% |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 1,868,200 | 964,439 | 903,761 | 52% |
| **மொத்தம்** | **15,000,000** | **12,242,474** | **2,757,526** | **82%** |

## 3. தொழில் மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடாக இலங்கையால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக் கமைவாக உள்நாட்டு தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, ஏனைய சமவாயங்கள் மற்றும் விதப்புரை களை சர்வதேசரீதியில் அங்கீகரித்து தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் சார்பாக தொழில் துறையிலிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு இவற்றைப் பயன்படுத்துதல் இந்தப் பிரிவின் முதன்மையான கடமையாகும்.

தொழில் துறை தொடர்பிலான அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இலங்கை நிறைவேற்றி யுள்ளது என்பதை சர்வதேச தொழில் தாபனத்திற்கும் ஏனைய பல்தரப்பு முகவர்களுக்கும் உறுதிப் படுத்தி, தொழில் கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய மட்டத்திலான சமூகக் கலந்துரையாடல் களை உருவாக்குதல் மற்றும் மனித வளங்களின் அபிவிருத்திக்கான சர்வதேச ஆதரவினைப் பட்டியலிடுதல் இந்தப் பிரிவின் தொழிற்பாடாகும்.

**குறிக்கோள்கள்**

- ❖ உலகமயமாக்கம் மற்றும் திறந்த பொருளாதாரத்தின் காரணமாக நிலையான அச்சுறுத்தலின் கீழ் வருகின்ற வேலையாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்தும் நோக்கில் தொழில்தருநர்கள் மற்றம் பணியாளர்களுக்கிடையிலான சிறந்த உறவினைத் தாபிப்பதில் நடவடிக்கை எடுக்கின்ற அதேவேளையில், இலங்கையால் எற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில் சமவாயங்கள் மற்றும் அச்சமவாயங்களை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றங்கள் பற்றியும் குறித்த நேரக்கட்டமைப்பிற்குள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு அறிவித்தல்.
- ❖ தொழில் துறை தொடர்பில் இலங்கையால் அடையப்பெற்ற முன்னேற்றங்களின் அடிப்படையில் சர்வதேச தொழில் சமூகத்திற்குக் கற்பிப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தல்.
- ❖ தொழில் துறையுடன் தொடர்புபட்டுள்ள பிரச்சினைகளைத் தெரியப்படுத்துவதற்கு சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி மற்றும் தொழில்நுணுக்க ஆதரவினைப் பட்டியலிடுதலை மேற்கொள்ளுதல்.
- ❖ அமைச்சினதும், அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கும் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் வெளிநாட்டுப் பயிற்சி ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுத்தல்.
- ❖ புதிய சட்டவாக்கங்களை வலுப்படுத்துதல் மற்றும் தற்போதைய போக்குகளுடன் ஒத்துப்போகும் வகையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**<u>2018 சனவரி 01 இலிருந்து 2018 டிசெம்பர் 31 வரையான செயலாற்றுகைகள்</u>**

- ❖ சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆம் இலக்க யாப்பின் கீழ் அனுப்பப்படுவதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல், 2018 ஆம் ஆண்டுக்கான 06 சமவாயங்களுக்கான அறிக்கைகளைத தயாரித்தல் மற்றும் 19 ஆம் இலக்க யாப்பின் கீழ் அனுப்பப்படுவதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல்.
- ❖ ஜெனிவாவில் வருடாந்தம் இடம்பெறுகின்ற சர்வதேச தொழில் மாநாட்டுக்கான பிரதிநிதிகளான முத்தரப்பின் பங்கேற்புடன் தொடர்புபட்ட அனைத்து ஒருங்கிணைப்பு மற்றும் பின்தொடர் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.
- ❖ முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் மாதாந்தம் கூடுகின்ற தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் கூட்டத்தின் ஒழுங்குபடுத்துநராக செயற்படுதல்.
- ❖ ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பீ+ சலுகைகள் மீளப்பெறுதலுடன் இணைந்துள்ள பிரச்சினை களைத் தீர்ப்பது தொடர்பான அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் தொடர்புபட்டுள்ள விடயங்களைத் தொடர்ச்சியாக அவதானித்தல் (உப குழுக் கூட்டங்களில் பிரதிநிதித்துவப் படுத்துதல்)
- ❖ அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களில், பயிற்சிப்பட்டறைகளில் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல். 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலப்பகுதியில் 65 அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றியுள்ளனர்.
- ❖ இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் பிரசுரிக்கப்படுகின்ற பொருளாதார மீள்நோக்கு மற்றும் பொருளாதாரத் தோற்றத்திற்கு உரிய தகவல்களை வழங்குதல் மற்றும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையுடன் தொடர்புபட்ட தகவல்களைத் தொகுத்தல்.
- ❖ தனியார் துறைப் பணியாளர்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் தற்போது செயற்பாட்டிலிருக்கின்ற சட்டவாக்கங்களில் முரண்பாட்டினை இல்லாது செய்யும் நோக்கிலும், நெகிழ்வுப் போக்கான சேவை நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நாட்டின்

தற்போதைய தேவைகளுக்கும் பொருந்தும் வகையில் புதிய சேவை நிபந்தனைகளை கூட்டிணைக்கும் நோக்கிலும் புதிய பிரேரணையை அறிமுகப்படுத்துவதற்கு அடித்தள வேலையை ஆரம்பித்தல்.

- இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் எதிர்காலத்தில் ஒப்பமிடவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளைக் கையாளுதல்.
- சிறுவர் தொழில் மீதான தேசிய செயல் ஆணைக்குழுவின் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.
- தொழில் துறை தொடர்பில் அமெரிக்க தூதரகத்தினால் வினவப்பட்ட வினாக்களிக்குப் பதிலளித்தல்.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பயன்பாட்டிற்காக தொழில் துறையின் நடைமுறைப் போக்கு பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல்.
- தொழில் துறையில் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்குப் பொறுப்பேற்று வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் கடல்சார் தொழில் சமவாயம், 2006 மற்றும் மீனவர்களின் அடையாள ஆவணங்கள் சமவாயம் 185, 2003 போன்றவற்றை ஏற்று அங்கீகரிப்பதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.
- வலுக்கட்டாய தொழில் மீதான 29 ஆவது வரைவேட்டினை ஏற்று அங்கீகரிப்பதற்கு தேவை யான ஒழுங்குகளை ஆக்குதல்.
- தென்னாபிரிக்க சமூகக் கலந்துரையாடல் பொறிமுறையைப் பரிசோதிக்கும் நோக்கத்துடன் ஆய்வு சுற்றுலாவில் பங்கெடுக்கின்ற 10 உறுப்பினர் முத்தரப்பு தூதுக்குழுவிற்கான ஒழுங்கு களை மெற்கொள்ளுதல் மற்றும் தற்போதைய தேசிய தொழில் ஆலோசனை சபையின் நியமத்தை செம்மைப்படுத்துதல்.
- சிறுவர் தொழிலை நிரந்தரமாக இல்லாதொழிப்பது தொடர்பான IV ஆவது உலக மாநாட்டில் இலங்கை சார்பாக பற்குபற்றுவதற்கு அலுவலர்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்து வாழிகாட்டியுள்ள நாடு என்ற பெயரினை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.
- பின்வருகின்ற தலைப்புகளில் பிராந்திய மட்டத்தில் முத்தரப்புப் பயிற்சிப்பட்டறைத் தொடர்களை ஒழுங்கமைத்தல் - தொழில் படையில் பெண்களின் ஆகக்குறைந்த பங்கேற்புக்கான காரணங்கள், முறைசாரா துறையில் பணியாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளுதல், முத்தரப்பு உடன்படிக்கைகளின் கீழ் சமமான தொழிலை உருவாக்குதல், பணியாளர்களின் ஆகக்குறைந்த வேதனத்தை தீர்மானிப்பதற்கான முறைமையியல், பெருந்தோட்டத்துறையில் தற்போதிருக்கின்ற பிரச்சினைகள், முக்கிய சவால்கள் மற்றும் தீர்வு நடவடிக்கைகள், கூட்டு பேரம்பேசலை ஊக்குவிப்பதிலுள்ள சவால்கள்.
- அமைச்சு தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து வகையான கொள்கைகளையும் வகுத்தமைப்பதற்கான ஆரம்ப முயற்சியை எடுத்தல்.
- தொழில் துறையுடன் தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீளமைப்பது தொடர்பான விடயங்கள், பொக்குகள் மற்றும் தேவை பற்றி கலந்துரையாடுவதற்கும் மற்றும் புதிய சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கும் விசேட குழுவான தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மீதான அமைச்சுசார் குழுக்களின் கூட்டங்களை நடத்துதல்.
- இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலை இலக்காகக்கொண்டு தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தின் (2017-2021) முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தின் ''தொழில் உரிமைகள்'' பற்றிய அத்தியாயம் தொடர்பான குறிக்கோள்களை அடைவதற்கும் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவைப்பட்ட அத்தியவசியமான திட்டங்களைப் பகுத்தல்.
- சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலணியின் கூட்டங்களுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பில் சர்வதேச தொழில் தாபனத்திற்குத் தேவையான ஆதரவினை வழங்குதல்.

## 4. நிதிப் பிரிவு

திறைசேரியின் முறைமை உருவாக்கல் அச்சேடுகளின்படி, 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் 2018 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையான நிதிச் செயலாற்றுகை

| நிகழ்சித்திட்டம் | கருத்திட்டம் | செலவினத்தின் வகை | தேறிய ஒதுக்கீடு (ரூபா) | செலவினம் (ரூபா) | நிலுவை (ரூபா) (ரூபா) | செலவீனம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | மீண்டெழுவது | 29,661,000 | 25,144,653 | 4,516,347 | 85 |
| | | மூலதனம் | 1,582,065 | 1,317,708 | 264,357 | 83 |
| | | மொத்தம் | 31,243,065 | 26,462,361 | 4,780,704 | 85 |
| 1 | 2 | மீண்டெழுவது | 80,794,000 | 76,688,940 | 4,105,060 | 95 |
| | | மூலதனம்* | 258,414,625 | 60,828,802 | 197,585,823 | 24 |
| | | மொத்தம் | 339,208,625 | 137,517,742 | 201,690,883 | 41 |

* மெஹேவர பியஸ கட்டடத்தின் உள் வடிவமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து தொழில் திணைக்களத்திற்கு 75 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

| நிகழ்சித்திட்டம் | கருத்திட்டம் | செலவினத்தின் வகை | தேறிய ஒதுக்கீடு (ரூபா) | செலவினம் (ரூபா) | நிலுவை (ரூபா) (ரூபா) | செலவீனம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | மீண்டெழுவது | 18,885,000 | 4,418,975 | 14,466,025 | 23 |
| | | மூலதனம் | 1,950,000 | - | 1,950,000 | 0 |
| | | மொத்தம் | 20,835,000 | 4,418,975 | 16,416,025 | 19 |
| 2 | 3(2) | மீண்டெழுவது | 12,000,000 | 11,850,790 | 149,210 | 99 |
| | | மூலதனம் | 1,500,000 | 1,500,000 | - | 100 |
| | | மொத்தம் | 13,500,000 | 13,350,790 | 149,210 | 99 |
| 2 | 3(3) | மீண்டெழுவது | 6,000,000 | 4,178,600 | 1,821,400 | 69 |
| | | மூலதனம் | 7,000,000 | 690,291 | 6,309,709 | 10 |
| | | மொத்தம் | 13,000,000 | 4,868,891 | 8,131,109 | 37 |
| 2 | 4 | மீண்டெழுவது | 52,782,400 | 52,401,693 | 380,707 | 99 |
| | | மூலதனம் | 460,000 | 146,694 | 313,306 | 32 |
| | | மொத்தம் | 53,242,400 | 52,548,387 | 694,013 | 99 |
| 2 | 5 | மீண்டெழுவது | 33,400,000 | 33,080,528 | 319,472 | 99 |
| | | மூலதனம் | 3,850,000 | 498,867 | 3,351,133 | 13 |
| | | மொத்தம் | 37,250,000 | 33,579,395 | 3,670,605 | 90 |
| 2 | 6 | மீண்டெழுவது | 25,405,000 | 4,763,357 | 20,641,643 | 18 |
| | | மூலதனம்** | 505,980,310 | 1,432,964 | 504,547,346 | 0.3 |
| | | மொத்தம் | 531,385,310 | 6,196,321 | 525,188,989 | 1 |

** சப்பிரகமுவ அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபா ஏற்பாடு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு மாற்றப்பட்டிருந்தது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முழு மொத்தம் | மீண்டெழுவது | 258,927,400 | 212,527,536 | 46,399,864 | 82 |
| | | மூலதனம் | 780,737,000 | 66,415,326 | 714,321,674 | 9 |
| | | மொத்தம் | **1,039,664,400** | **278,942,862** | **760,721,538** | **27** |

02

# தொழில் திணைக்களம்

1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவுக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழில் திணைக்களமானது நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினை முன்னேற்று வதற்கு நாட்டிலிருக்கின்ற மிகவும் முக்கியமான அமைப்பாகும். தொழில் திணைக்களத்தின் அடிப்படை வகிபாகம், நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்புச்செய்கின்ற, தொழிற்றுறை அமைதியைப் பேணி தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துகின்ற தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளின் தொழிலணியின் வேதனங்கள், சேவை நிலைமைகள், தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சேமநலன் தொடர்பான சட்டவாக்கங்களை வரைதலும், நடைமுறைப்படுத்துதலும் ஆகும்.

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள 13 பிரதான பிரிவுகள் நாடுபூராகவும் பரவியுள்ள வேலையாளர்களின் தேவைகளைத் தெரியப்படுத்துவதற்கு பல்வகைப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்காக தொழிற்பாட்டிலிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக, வேலையாளர் களுக்கு சட்டப் பாதுகாப்பினையும் சேமநலனையும் வழங்கி அவர்களது வேலைத் தளங்களில் பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக 11 வலய தொழில் அலுவலகங்கள், 40 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் தொழிற்படுகின்றன. 2018 டிசெம்பர் 31 இலுள்ளவாறு திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியனர் 2669 ஆகும்.

### தொலை நோக்கு


சர்வதேசரீதியில் போட்டிப் பொருளாதாரத்திற்காக தொழிற்றுறை அமைதியைத் தாபித்துள்ள நாடொன்று.

### செயற்பணி

தொழிற்றுறை அமைதியை உறுதிப்படுத்துகின்ற சீரிய வேலைச் சூழலொன்றைத் தாபிப்பதனூடாக இலங்கையின் அபிவிருத்தி செயல்முறையினை நோக்கிப் பங்களிப்புச் செய்தல்.

### தொழிற்பாடுகள்


- நாட்டில் தொழில் அமைதியைப் பேணுவதற்கு தொழில் சட்டங்களை வினைப்படுத்துவதனூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- தொழில் சட்டங்கள் தொடர்பாக உழைக்கும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழிற்றுறை அமைதியைத் தாபிப்பதற்கு சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துதல்.
- வியாபாரங்களுடன் தொடர்புபட்ட தொழில் நியமங்களை நடைமுறைப்படுத்துதல், புதிய வியாபாரங்கள் தொடர்பில் கணக்கெடுப்பினை நடத்துதல் மற்றும் அந்த வியாபாரங்களுக்கு சர்வதேச நியமங்களுக்கமைவாக நியமங்களை உருவாக்குதல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துதல், அதன் நன்மைகளை உறுப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்.
- தொழிலிலுள்ள சிறுவர், பெண்கள் மற்றும் இளம் நபர்களைப் பாதுகாப்பதற்கு உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய முறைகளை அறிமுகப்படுத்துதலும், விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும், இதனை மேற்பார்வையிடுதலும்.



தொழில் திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு
தொழில் ஆணையாளர் அதிபதி
மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (நிருவாகம்)
மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (திணைக்களம்)
மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி (பொறியியல்)
பிரதம கணக்காளர்
பிரதம அக்க கணக்காய் வாளர்

**தொழில் பரிசோதனைகள்**
சா்வதேச போட்டியில் உள்நாட்டு உற்பத்திப்பொருட்களைப் பாதுகாக்கின்ற அதேவேளையில் பே உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான முக்கிய பிரிவுகளாக வேலைத்தலக் கூட்டுறவு ம தொழிற்றுறை அமைதி ஆகியன விளங்ககின்றன.இதன் முடிவினை நோக்கி தொழில் பரிசோதனை பாரிய பங்கினை வகிக்கின்றன. தொழில் பரிசோதனைகளின்முறையான செயல்முறை, வேலை விபத்துக்களைக் குறைப்பதில், குறித்த வேதன அளவுத்திட்டங்களையும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதில் மற்றும் சிரமமற்ற ஓய்வூதிய வாழ்க்கையை உத்தவாதமளிக்கின்ற ச பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவுவதில் மற்றும் தொழிற்றுறை அமைதியைத் தாபிப் பங்களிப்புச் செய்கின்றது.


2018 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலா்களினால் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் மிகவும் அதிகமாக 71270 என்பதாகவிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ஆட்சோ்ப்புச் செய்யப்பட்ட புதிய தொழில் அலுவலா்களின் சேவையை ஆதாயமுள்ளதாகப் பயன்படுத்தியமை இந்த முடிவிற்கு பாரிய பங்களிப்பினை நல்கியிருந்தது.




குறிப்பு: மாற்றத்திற்கமைவாக, வரைபு 2018 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைக்கப் பெறுகின்ற தகவலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**தொழில் பிணக்குகளுக்கான தீர்வுகள்**

தொழில் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேறுவகையான நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் உதவியுள்ளதுடன்,தொழில் பரிசோதனைகள் காரணமாக பிணக்குகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் ஊடகத்தினூடாக திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் நடத்தப்பட்ட விழிப்புணா்வு நிகழச்சித்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.




**குறிப்பு: 2018 ஆம் ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற தற்போதைய தகவலின்படி தயாரிக்கப்பட்ட வரைபடம் மாற்றத்திற்கு அமைவானது**

### கூட்டு ஒப்பந்தங்களின் பதிவு

கூட்டு உடன்படிக்கைகள், தொழில் சட்டவாக்கங்களினூடாக அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளிலும் பார்க்க சிறந்த சிறப்புரிமைகளைப் பெறுவதற்கு பணியாளர்களை இயலச் செய்கின்றன. 2018 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

### தொழிற்சங்க செயற்பாடுகள்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 183 என்பதுடன் இரத்துச் செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 83 ஆகும். இதன்படி, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்குகின்ற தொழிற் சங்கங்கள் / சமாஜங்களின் எண்ணிக்கை 1909 ஆகவிருந்தது.

### தொழில் நியாயாதிக்கசபை நடவடிக்கைகள்

கட்டாய நடுத்தீர்ப்பிற்காக அனுப்பப்பட்டவை 72 என்பதுடன், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் 43 ஆகவிருந்தது.

### பணி முடிவுறுத்தல்


பணி முடிவுறுத்தல் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகள் 224 என்பதுடன், ஆண்டு காலப்பகுதியில் 154 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்தன.

தொழில் முடிவுறுத்தலை தேவைப்படுத்திப் பெறப்பட்ட 36 விண்ணப்பங்களுக்குள் ஆண்டு காலப்பகுதியில் 46 இற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### பணிப் பகிஷ்கரிப்பு

பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளின் உழைக்கும் அணியினால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## தெரிவிக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகள்




**சட்ட விடயங்கள்**

தொழில் திணைக்களமானது, தொழில் கட்டளைச்சட்டங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதனூடாக வேலையாட்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதுடன், தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பினையும் பேணுகின்றது.

இதன்படி, 2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 ஆம் திகதி வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை:

| **நீதிமன்றம்** | **2018 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | **2018 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்ட வழக்குகள்** | **2018 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 181 | 24 | 0 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 336 | 47 | 0 |
| உயர் நீதிமன்றம் | 173 | 50 | 49 |
| மாவட்ட நீதிமன்றம் மற்றும் வர்த்தக உயர் | 210 | 17 | 11 |

**2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையில் நாடளாவியரீதியில் தொழில் அலுவலகங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விபரங்கள்**

| | உரிய சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | தள்ளுபடிசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | வழக்குகளினூடாக அறவிடப்பட்ட தொகை ரூபா.மில். |
|---|---|---|---|---|
| 1 | பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 753 | 530 | 88.71 |
| 2 | கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 34 | 08 | 1.15 |
| 3 | தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 15 | 06 | 0.73 |
| 4 | சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 174 | 37 | 6.12 |
| 5 | கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 71 | 09 | 0.1 |
| 6 | தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 2 | - | - |
| 7 | பெண்கள், இளம் நபர்கள், சிறுவர் தொழில் சட்டம் | 3 | 1 | - |
| 8 | ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 1986 | 1352 | 1120.9 |
| 9 | மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம் | 63 | 12 | 4.2 |
| 10 | வரவு செலவுத்திட்ட நிவாரணச் சட்டம் | 128 | 16 | 0.08 |
| 11 | அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | 25 | 1 | 0.001 |

## ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகள்

ஊழியர் சேமலாப நிதியம், தொழில் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகின்ற நாட்டின் உழைக்கும் வர்க்கத்திற்காக பாதுகாப்பான ஓய்வூதியத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையில் தொழிற்படுகின்ற மிகவும் பயனுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். 2018 ஆம் ஆண்டில் அதன் முன்னேற்றம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | 2018.12.31 |
|---|---|---|
| பணியாளர்களின் ஒட்டுமொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை | | 18,032,464* |
| பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை | | 229,048* |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா மில்.) | | 2,183,308* |
| செயலுறு பணியாளர்களின் எண்ணிக்கை | | 2.7* |
| செயலுறு தொழில்தருநர்களின் எண்ணிக்கை | | 76,782* |
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 417,041* |
| | தொழில்தருநர்கள் | 9267* |
| நன்மைகள் கொடுப்பனவு | பயனாளிகளின் எண்ணிக்கை | 55658* |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா மில்.) | 50415* |
| சேகரிக்கப்பட்ட உதவுதொகைகள் (மில். ரூபா) | | 70956* |
| ஊ.சே.நி வீடமைப்புக் கடன் | அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண். | 4805* |
| | அனுமதியளிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்களின்பெறுமதி (ரூபா. மில்.) | 2.12* |

**2018.06.30 இலுள்ளவாறு நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவலின்படி

**2018 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை**

| நன்மைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வூதிய வயதை அடைவதன் பேரில் சேவையிலிருந்து ஓய்வூதியத்தின் போதான நன்மைக் கொடுப்பனவுகள் | 88,690 |
| திருமணத்தின் போது சேவையிலிருந்து விலகுகின்ற பெண்களுக் கான நன்மைக் கொடுப்பனவுகள் | 22,522 |
| நிரந்தர இயலாமை காரணமாக பதவியை வெறிதாக்குகின்றபோது நன்மைகள் கொடுப்பனவு | 1,038 |
| இறக்கின்ற உறுப்பினர் நன்மைகள் | 4,944 |
| 30% முன் ஓய்வூதிய நன்மைகள் | 29,876 |
| வெளிநாடொன்றில் நிரந்தரமாக வதிப்பது தொடர்பான நன்மைக் கொடுப்பனவுகள். | 2,067 |
| அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரமான ஓய்வூதியப் பதவியினைப் பெறுவதன் மீதான நன்மைக் கொடுப்பனவு | 7,215 |
| ஆட்க்குறைப்பு அல்லது கம்பனிக்கு மாறுவதன் காரணமாக அரச கூட்டுத்தாபனம் சபை மூடப்படுவதன் விளைவாக சேவையிலிருந்து விலகுகின்ற பணியாளர்களுக்கான நன்மைகள் கொடுப்பனவு | 662 |

- ஊழியர் சேமலாப நிதியத்தின் பதிவுத் தகவல்களைத் திருத்துவதனை மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு இந்த வருடத்தின் நடுப்பகுதியிலிருந்து பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ஊ.சே.நி 30% முன் நன்மைகளுக்காக தொழில் அலுவலர்களுக்கு ஒருமித்த முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஊ.சே.நிதியத்தின் 75% இனை வீடமைப்புக் கடனாக வழங்குவதனை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ஊ.சே.நி ஊக்குவிப்பிற்காக 2018 ஆம் ஆண்டில் 30 நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன், ஊ.சே.நி பற்றிய விளம்பரப்படுத்தல்கள் இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளிலும், இரண்டு வானொலி ஒலிபரப்புச் சேவைகளிலும் ஒளி, ஒலிபரப்புச் செய்யப்பட்டிருந்தன.

**சமூக கலந்துரையாடல்**

தொழில் திணைக்களமானது ஆலோசனை மற்றும் இணைந்து தீர்மானம் எடுத்தலில் ஈடுபடுவதற் காக சமூக பங்குதாரர்களிடையே கலந்துரையாடல் மற்றும் கூட்டுறவினை மேம்படுத்துவதனூடாக தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியத்தினைப் பேணி பொருளாதார மலர்ச்சியை அடைவதற்கு அர்ப்பணிக்கின்றது.

இதன்படி, சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

| | | நிறுவனம்சார் பயிற்சிப் பட்டறைகள் | பகுதியள விலான அரச துறைக்கான பயிற்சிப் பட்டறை | முகாமையாளர் மற்றும் வேலையாளர் களுக்கான பயிற்சிப்பட்டறை |
|---|---|---|---|---|
| சமூக கலந்துரையாடல் பிரிவினூடாக | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | 60 | 10 | 10 |
| | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 2,918 | 541 | 410 |
| மாவட்டம் மற்றும் உப தொழில் அலுவலக | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | 54 | - | - |
| | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 2,232 | - | - |

திணைக்களமானது, சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு என்ற எண்ணக்கருவினை மேம்படுத்துவதற்காக வருடாந்தம் நாடளாவியரீதியில் சமூகக் கலந்துரையாடல் களையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஒழுங்கமைத்து நடத்துகின்றது. 2018 ஆம் ஆண்டிலும்கூட, போட்டிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்ததுடன், வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டிருந்தன. சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு என்ற எண்ணக்கரு உச்ச மட்டத்தில் நடைமுறைப்படுத்துகின்றது என்பதை நிறுவனங்கள் இனங்காண்பதற்கும், பணியாளர்களின் புத்துருவாக்க ஆற்றல்களைப் பாராட்டுவதற்கும் தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவருக்கும் நாடளாவியரீதியிலான சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவுப் போட்டி நிறுவனஞ்சார்ந்த மட்டத்தில் நடத்தப்பட்டிருந்தது. மேலும், சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு என்ற செய்தியை ஊக்குவிக்கும் நோக்கில் கட்டுரைகள் மற்றும் ஏனைய உருவாக்கங்களின் தொகுப்பான 'கதிகாவ' என்ற மஞ்சரி 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## தொழில் நியமங்கள்

தொழில் திணைக்களத்தின் தொழில் நியமங்கள் பிரிவு, தனியார் துறையினால் பணிக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களின் நலன்புரி மற்றும் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் வேலை நியமங்கள் மற்றும் நிபந்தனைகளை வகுத்தமைப்பதற்கும், அதற்கு சட்ட அந்தஸ்தை வழங்கு வதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

இதன்படி, பின்வருகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அலுவலகக் காலம் முடிவடைந்த 06 சம்பளச் சபைகளுக்குப் பிரதிநிதிகளை நியமித்தல்.
- ஆகக்குறைந்த வேதனம் 10,000 ரூபாவுக்குக் குறைவான 19 சம்பளச் சபைகளின் வேதனத்தை அதிகரித்தல்.
- கோக்கோ, ஏலம், மிளகு வளர்ப்பு மற்றும் ஏற்றமதி கைத்தொழிலின் மாத வேதனங்களைப் (யூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கானது) பிரசுரித்தல்.
- ஐந்து நாள் வேலை வாரத்திற்கு 269 அனுமதிகளை வழங்கியமை.
- கூட்டு ஒப்பந்தங்களின் நிறைவு தொடர்பில் 61 பரிசோதனைகள் நடத்தப்பட்டிருந்தன.
- தேயிலை வளர்ப்புக் கைத்தொழில் ஆணை மற்றும் சேவை நிபந்தனைகளின் வரைவினைப் பிரசுரித்தல்.
- புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தொழில் அலுவலர்களுக்கு கடை மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்டம், சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம், பணியாளர்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம் மற்றும் வேலையாளர்களின் ஆகக்குறைந்த சம்பளச் சட்டம் போன்றவை பற்றிய விழிப்புணர்வினை நடத்துதல்.

- பிரிவுக்கு உரிய அனைத்துச் சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களை திணைக்களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்குதல் மற்றும் 11 சம்பளச்சபைகளின் தீர்மானங்களை தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.

**பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவு**

பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவின் பிரதான பொறுப்பு, பெண்களை வலுப்படுத்துதல், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் தொழில் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் உரிய சட்டவாக்கங்களை வலுப்படுத்துதல் போன்றவற்றினூடாக, தொழிலை மேம்படுத்து தலாகும்.

இதன்படி, பின்வருகின்ற செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருந்தன.

**சட்டங்களைத் திருத்துதல்**

கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்டம் 2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், மகப்பேற்று நன்மைகள் சட்டம் 2018 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்தினாலும் 2018 யூன் 18 ஆம் திகதி திருத்தப்பட்டிருந்தன.

மேலும், 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர் சட்டத்தின் 2006 ஆம் அண்டின் 24 ஆம் இலக்கத் திருத்தத்தின்படி பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரும் தீங்கிளைக்கின்ற தொழிலில் ஈடுபடுத்தப்படுதலாகாது என்பதனால், தீங்கிளைக்கின்ற தொழிலின் பட்டியல் திருத்தப்பட்டு, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆட்களின் உடல், உள ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடியவையாக 77 தொழில்கள் 2018 ஆம் ஆண்டில் இனங்காணப் பட்டிருந்ததுடன், அவற்றிற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- **சர்வதேச மகளீர் தினம் (2018.06.12)**

பெருந்தோட்டத் துறையிலிருக்கின்ற வேலையாளர்களில் பெரும்பான்மையானோர் பெண்களா வார்கள். ஆகவே, இலங்கையின் பொருளாதாரத்திற்கு அவர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பினைப் பாராட்டுவதற்காக, பெருந்தோட்டத்துறையில் குறைவடைந்து செல்கின்ற தொழில் பங்களிப்பினால் உருவாக்கப்பட்ட கேள்வியை நிரப்புவதற்கு இளம் தொழில் சமூகத்தை ஊக்குவிப்பதற்காகவும், அத்துடன் அரச மட்டத்தில் நீண்ட காலமாக கௌரவிக்கப்படாத பெருந்தோட்டத்துறை பெண் தொழிலாளிகளைக் கௌரவிக்கும் நோக்கில், சர்வதேச மகளீர் தினத்துடன் இணைத்து அவர்களுக்கு விருது வழங்கும் வைபவமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்த வைபவத்தில், 20 வருடங்களுக்கு மேலாக தேயிலை மற்றும் இறப்பர் கம்பனிகளில் பணியாற்றியிருந்த மற்றும் சேவையில் அவர்களின் உயர் ஆக்கத்திறன் மற்றும் தரம் இனங்காணப்பட்டு 105 பெண் தொழிலாளிகளுக்கு ‘‘திறிய ரண்லிய ஷரமபாகிமாணி’’ விருது வழங்கப்பட்டிருந்தது.

- **சிறுவர் தொழிலுக்கெதிரான உலக தினம் (12.06.2018)**

தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு, நாடளாவியரீதியில் தீங்கிளைக்கின்ற தொழில் பற்றி சோதனை நடத்தியிருந்ததுடன், சிறுவர்களது சிறந்த உடல், உள விருத்திக்கு இட்டுச்செல்கின்ற சிறுவர் தொழிலை, தீங்கிழைக்கின்ற தொழில்களைக் குறைப்பதன் மூலமும், சுகாதாரத்தையும் கல்வியையும் செம்மைப்படுத்தி நிலையான அபிவிருத்திக்கான நிலையை உருவாக்கி சிறுவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் குறிக்கோளுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியிருந்தது. பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு, பிராந்திய அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களின் ஒருங்கிணைப்புடன் 2018.06.12 இலிருந்து 2018.06.14 வரையில் நாடு முழுவதையும் உள்ளடக்கி 472 நிறுவனங்களைப் பரிசோதித்துள்ளது.

## ❖ சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம் (01.10.2018)

சர்வதேச சிறுவர் தினம் - 2018, தொழில் திணைக்களத்தினால் 2018 ஒக்டோபர் 01 ஆம் திகதி கொண்டாடப்பட்டிருந்தது. இந்த நாளை முன்னிட்டுநாட்டின் குறித்த பிரதேசங்களை மையப்படுத்தி சிறுவர் உழைப்பினை தொழிற்றுறைக்கு வழங்குவதைக் குறைக்கும் மற்றும் சிறுவர்கள் ஆண்டு முழுவதிலும் பாடசாலைக்குச் செல்வதை ஊக்குவிக்கும் உத்தேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5 பாடசாலைகளில் 5 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

மேற்கு தொழில் அலுவலக வலயம் II இனால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நிகழ்வு, களுத்துறை மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, தென் வலயத் தொழில் அலுவலகத்தின் ஹிக்கடுவ குமாரகந்த வித்யாவர்தன வித்தியலயத்தில் தனது நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியிருந்ததுடன், மத்திய வலய தொழில் அலுவலகம் தனது நிகழ்ச்சித் திட்டத்தை நுவரெலியா விஜிரங்கன மகா வித்தியாலயத்தில் நடத்தியிருந்தது. வடமேல் வலய தொழில் அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம், சிலாபம் வெலகொலனியா சென். சேபஸ்ரியான் வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்ததுடன், கிழக்கு வலய தொழில் அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்ற இடம் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய கல்லூரியாகும். உளவியல் மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி உசாவுகை மற்றும் சிறுவர் தொழில் பற்றிய புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டு பிரதான பிரிவுகளகும்.

## ❖ இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான கருதிட்டத்தின் கீழ் சிறுவர் தொழிலற்ற வலயத்தைத் தாபிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்கள்

பிராந்திய அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களின் ஒருங்கிணைப்புடன், நாடு முழுவதையும் உள்ளடக்கி சிறுவர் தொழிலுக்கெதிரான உலக தினத்துடன் இணைந்து, பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு 472 நிறுவனங்களை 2018.05.12 இலிருந்து 2018.06.14 வரை பரிசோதித்துள்ளது.

## ❖ 2018 ஆம் ஆண்டில் சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள்

இந்தப் பிரிவு, சிறுவர் தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்தருநர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தினால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மற்றும் பல்வேறு தெரிந்த, அனாமதேய மூலங்களிலிருந்து அனுப்பப்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கின்றது.

இதன்படி, 2018 ஆம் ஆண்டில் அத்தகைய முறைப்பாடுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை களின் முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | 127 | |
| தீர்க்கப்படுவதற்கான கோப்புகளின் எண்ணிக்கை | **முறைப்பாடு செய்யப்பட்ட ஆண்டு** | **2018 இல் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
| | 2016 | 13 |
| | 2017 | 40 |
| | 2018 | 76 |
| நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 03 | |
| தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 01 | |

**இரவு நேரத்தில் பெண்கள் தொழில் புரிதல்**

திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழான ரூபா ஏற்பாட்டினைப் பயன்படுத்தி இரவு நேரத்தில் பெண்கள் தொழிலுக்கமர்த்தப்படுவது பற்றி வலய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் இணைந்து 71 பரிசோதனைகளை நடத்தியிருந்தன.

| | |
|---|---|
| நடத்தப்பட்ட இரவு நேரப் பரிசோதனை களின் எண்ணிக்கை | 71 |
| செலவுறப்பட்ட தொகை | ரூபா 246 500 |
| உள்ளடக்கப்பட்ட பெண் பணியாளர் களின் எண்ணிக்கை | 5943 |
| வெளிப்படுத்தப்பட்ட வன்முறைகளின் எண்ணிக்கை | 57 |
| சட்ட நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டுள்ள கோப்புகளின் எண்ணிக்கை | 17 |

மேலும், இரவு நேரத்தில் பெண்கள் தொழில்புரிவதற்கு 579 அனுமதிகள் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளதுடன், 528 அனுமதிகள் வலய மற்றும் மாவட்ட அலுவலகங்களினால் வழங்கப்பட்டுள்ளன.

❖ **பிரதித் தொழில் அமைச்சரால் தலைமை தாங்கப்பட்ட தென்னாபிரிக்க தூதுக்குழு இலங்கைக்கு விஜயம்**

தென்னாபிரிக்க குடியரசின் பிரதித் தொழில் அமைச்சரின் தலைமையில் வெளிநாட்டுத் தூதுக்குழு வொன்று, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய ஆய்வு சுற்றுலாவின் பேரில் 2018.10.07 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தது.

இந்த விஜயத்தின்போது, சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், தொழில் சட்டங்களைக் குறியிடுதல், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறை, சமூகக் கலந்துரையாடல் மற்றும் மாற்றுத்தினாளிகளுக்கான தொழில் உபாயங்கள் போன்ற அத்தகைய விடயங்களைக் கையாள்வதற்கான தத்துவங்களுடன் தரப்பினர் இணங்கியிருந்தனர்.

❖ **2018 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **கொக்கல்ல மகளீர் விடுதியில் நடத்தப்பட்ட உளவியல் உசாவுகை நிகழ்ச்சித்திட்டம்**

கொக்கல்ல கைத்தொழில் வலயத்தின் மகளீர் விடுதியின் விடுதிப் பராமரிப்பாளர்களுக்காக 2018.11.25 ஆம் திகதி உளவியல் உசாவுகையொன்று பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினால் நடத்தப்பட்டது.

- **வெள்ளவத்தை சிறுவர்கள் மூலமான பிரச்சினைகள் தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வு நிகழ்சித்திட்டங்களை நடத்ததல் மற்றும் அத்தகைய பிரச்சினைகளைத் தடுத்தல்**

அமைதியான மற்றும் ஒய்வான சிறுவர் பராயத்தை இழந்துள்ள மற்றும் சிறுவர் தொழிலால் பாதிப்படையக்கூடிய பிரதேசத்தின் பிள்ளைகளாக கருதி பாமன்கடை இராமகிருஷ்ணா வித்தியாலயத்தில் 2018.11.27 ஆம் திகதி பெற்றோர்களுக்கும், ஏனைய அக்கறைதாரர்களுக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு, விழிப்புணர்வு நிகழ்சித்திட்டமொன்றை நடத்தியிருந்தது.

- **“வேலைத்தலங்களில் பால் வேறுபாட்டை அடிப்டையாகக்கொண்ட வன்முறை” தொடர்பான தற்போதைய நிலைமையை மீளாய்வதற்கான பயிற்சிப்பட்டறை**

தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு, வேலைத்தலங்களில் தற்போதிருக் கின்ற முறையியல், பொறிமுறை மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குத் தீர்வுகளை வழங்குதல் போன்றவற்றை மீளாய்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்புடன் மீளாய்வுப் பயிற்சிப்பட்டறையொன்றை நடத்தியிருந்தது.

## கைத்தொழில் பாதுகாப்பு

தொழில் திணைக்களம் உலக பாதுகாப்புத் தினத்தை குறிக்குமுகமாக ஒவ்வொரு ஆண்டும் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதுடன், இந்த வருடத்தின் நிகழ்ச்சித்திட்டம், அவிசாவெலவில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் நடத்தப்பட்டது. தீங்கற்ற ஆரோக்கியமான வேலைச் சூழல், பணியாளர்களின் வினைத்திறனையும், ஆக்கத்திறனையும் அதிகரிப்பதில் உதவிகரமானதாக வளங்கும் என்பதுடன், தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. அகவே, தொழில் திணைக்களமானது, அழிவுகள், விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்ற அதேவேளையில், 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு என்பது சட்டக் கடப்பாடு என்பதுடன், இந்த கட்டளைச் சட்டத்தை வலுப்படுத்துவது கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாகும்.

**2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2018.12.31 வரையான முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம்/செயற்பாடு/ கட்டம் | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | 2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையான பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பரிசோதனை மற்றும் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் பற்றிய விசாரணைகள் | 6400 | 4424 |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 240 | 199 |
| அதிகளவு ஆபத்தான இயந்திரங்களைப் பரிசோதித்தல் | 8000 | 8407 |
| தொழிற்சாலைகளின் புதிய பதிவுகள் | 1600 | 1429 |
| சட்டச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் | 16 | 35 |
| தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை | 15 | 11 |
| உலகப் பாதுகாப்புத் தினம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் என்பவற்றை முன்னிட்டு நிகழ்ச்சிட்டங்களை நடத்துதல் | 6 | 8 |

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 105 மரணத்தை ஏற்படும் விபத்துக்கள் மற்றும் 1467 மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அத்தகைய விபத்துக்களை எதிர்காலத்தில் குறைப்பதற்கு பின்வருகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- தொழில்சாலைகளைப் பரிசோதிப்பதன் மூலம் விபத்துக்களுக்கு சாத்திய நிலைமைகளை இனங்காணுதல் மற்றும் கைக்கொள்ளப்படக்கூடிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல்.


- அதிகளவு ஆபத்துள்ள இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற தொழிற்சாலைகளைக் கிரமமாகப் பரிசோதித்தல் மற்றும் அவற்றிற்கான பரிசோதனை மற்றும் பராமரிப்பு அறிக்கைகளைக் கிரமமாகப் பெறுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- விபத்துக்களைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வுகளை உருவாக்குகையில், பாதுகாப்பு அறிவுறுத்தல்களுடன் இணங்கத் தவறுகின்ற தொழிற்சாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.

- அறிக்கையிடாத விபத்துக்களுக்கெதிராக சட்ட வடிக்கை எடுத்தல்.
- 12,000 துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுதல்.
- 11,400 தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு 154 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

| பிரிவு | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நிருமாணம் | 78 | 4690 |
| புடைவை | 30 | 2690 |
| ஏனைய உற்பத்திப்பொருட்கள் | 37 | 2820 |
| ஏனையவை | 09 | 1200 |
| **மொத்தம்** | **154** | **11400** |

**அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள்**




உலக

பாதுகாப்புத் தினத்தைக் குறிக்குமுகமாக ஒவ்வொரு ஆண்டும் எப்பிரல் 28 ஆம் திகதி தேசிய கருத்தரங்கொன்று நடத்தப்படுவதுடன், இந்த ஆண்டு கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் தலைமையில், 250 பங்குபற்றுனர்களுடன் 2018.04.27 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் 10 ஆவது தளத்தில் கருத்தரங்கு இடம்பெற்றிருந்தது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் பற்றிய தேசிய கருத்தரங்கு கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் தலைமையில், 2018.10.11 ஆம் திகதி கொழும்பு 07 சவுசிரிபாய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை மையப்படுத்தி 250 தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விரிவுரைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

தொழில்சார் நோய்களை ஏற்படுத்தக்கூடிய சேவை நிலைமைகளை மதிப்பிடுவதற்காக சூழல்சார் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், தொழில்சார் நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்கு தொழில் திணைக்களத்தால் ஆரம்ப நிலையில் கண்டறிதல் மேற்கொள்ளப் பட்டிருந்து. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இச்செயற்பாடுகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுளன.

| நிகழ்ச்சித்திட்டம் | 2018ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | 2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையான பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| சூழல்சார் அளவீடுகள் | 150 | 170 |
| பௌதீகம்சார் பரிசோதனைகள் | 1000 | 1905 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 250 | 237 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 230 | 222 |
| ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நிதிய மருத்துவ சபைகள் | 24 | 24 |

திணைக்களத்தின் அவதானத்திற்குக் கொண்டுவரப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட பல பிரச்சனையான நிலைமைகள் தொடர்பில் பின்வருகின்ற தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- முன்னணி அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களை அதிக ஆபத்தான உற்பத்திப்பொருள் உற்பத்திச் செயன்முறையுடன் கூடிய மூன்று தொழிற்சாலைகளைப் பரிசோதித்து, மற்றும் பணியாளர்களின் இரத்தத்தினை 6 மாதங்களுக்கொருமுறை பரிசோதிப்பதற்கு நவம் லங்கா- மீரிகம, லியோச் லங்கா பட்டதா, மற்றும் கைலாஷ் மேட்ரோகொம் - அவிசாவளை ஆகியன அறிவுறுத்தப்பட்டிருந்தன.

- இரசாயன விபத்துக்களை விசாரித்தல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக அறிவுறுத்தல் களை வழங்குதல்.

- 'ஏஜிஓ' புகையிலை பதனிடும் கம்பனி தலையிட்டுள்ள தொழில் பிணக்கொன்றினைத் தீர்ப்பதற்காக இந்தக் கம்பனியை, அதன் பணியாளர்களை இந்தப் பிரிவு பரிசோதித்து, பரிந்துரைகளைச் சமர்ப்பிந்திருந்ததுடன், தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் தொழில் சங்கங்களின் ஒருங்கிணைப்புடன் அந்தப் பிணக்கினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- யாஎல போலிரெக்ஸ் அப்பிரல் தொழிற்சாலையில் இரண்டு தடவைகள் இடம்பெற்ற தொழில் பிணக்கு தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் தொழில் சங்கங்களின் ஒருங்கிணைப் புடன் தீர்க்கப்பட்டிருந்தது.

- 2018.10.03 ஆம் திகதி நடைபெற்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்தரங்கினூடாக தொழிற்றுறையின் 150 பிரதிநிதிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**<u>பயிற்சியளிக்கும் செயற்பாடுகள்</u>**

ஆக்கத்திறனை அதிகரிகரிப்பதற்கு திறனுள்ள, தகுதிவாய்ந்த தொழிலணியொன்றை உருவாக்கும் குறிக்கோளுடன், திணைக்களம் அதன் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதில் விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

கீழே தரப்பட்டுள்ளமை, 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் பணியாளர்களுக்கு இத்திணைக்களம் ஒழுங்கமைத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

| | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை | பங்குபற்றியவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 301 |
| 2. | தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 168 |
| 3. | திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப முறைமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 06 | 349 |
| 4. | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 03 | 166 |
| 5. | தொழில் சட்டாக்கங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 200 |
| 6. | நிதி விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 95 |
| 7. | ஊ.சே.நிதியத்துடன் தொடர்புபட்ட பயிற்சிப்பட்டறை | 30 | 2500 |
| 8. | சர்வதேச தொழில் தாபனத்தினால் அனுசரணையளிக்கப்பட்ட பயிற்சிப்பட்டறை | 05 | 240 |
| | **மொத்தம்** | **51** | **4019** |

மேலும், வெளிவாரி பயிற்சியளிக்கும் நிறுவனங்களினால் நடத்தப்பட்ட பின்வருகின்ற கற்கை நெறிகளுக்கு ஏற்பாடுகள் அனுமதியளித்த அலுவலர்கள்

| | நிகழ்ச்சித்திட்டம் | ஏற்பாடுகள் அனுமதியளித்த அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பட்டப்பிற்படிப்பு பட்டங்கள் | வருடத்திற்குள் புதிதாக அனுமதியளிக கப்பட்டவை - 06, தவணக்கட்டணம் - 21 |
| 2. | சட்ட பட்டம் | 13 (தவணைக்கட்டணமாகப் பெறப்பட்டவை) |
| 3. | டிப்புளோமா கற்கைநெறிகள் | 08 |
| 4. | சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் | 51 |
| | **மொத்தம்** | **99** |

**மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களைக் கண்காணித்தல்**

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களைக் கண்காணிக்கும் செயன்முறை புதிய மாதிரியின் கீழ் திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி, தொழில் பரிசோதனைகள், ஊ.சே.நி தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் போன்றவற்றைக் கண்காணிப்பதற்காக முன்னுரிமை வழங்கப்பட்டது. தொழில் பரிசோதனைகளின் தரத்தையும் எண்ணிக்கையையும் அதிகரிப்பபது, முறைப்பாடுகளுக்கான தீர்வுகளை விரைவுபடுத்துதல், ஊ.சே.நிதி நிலுவையை மற்றும் கொடுப்பனவினை விரைவான முறையில் அறவிடுவதனைக் கணனிமயப்படுத்தல் முறைமையைப் பயன்படுத்துதல், LISA நிகழ்ச்சித்திட்டத்தை நாளது வரைப்படுத்தல், பொது வைப்புக் கணக்கினைத் தீர்த்தல் மற்றும் அத்தகைய செயற்பாடுகளை உச்சளவில் பேணுவதற்கான தேவை தொடர்பில்

மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கண்காணித்தல் என்பது, ஊவா, மத்திய மேல் II, வடமேற்கு மற்றும் தெற்கு வலயங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினால் பின்பற்றப்பட்டிருந்தது.

## புள்ளிவிபரவியல் பிரிவு

மிகவும் சரியான தகவல்களை, புள்ளிவிபரங்களை சேகரித்தல், பகுத்தராய்ந்து, வெளிப்படுகின்ற போக்குகளைக் கற்றாராய்ந்து, இலங்கை தொழில் துறையில் சிக்கலான மாற்றங்கள் மற்றும் சேகரித்த புள்ளவிபரங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்திற்கான கருத்திட்டமிடுதலை ஆக்குதல் புள்ளிவிபரவியல் பிரிவின் பிரதான கடமையாகும். இதன்படி, 2018 ஆம் ஆண்டில் பின்வருகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- 2017 ஆம் ஆண்டு வருடாந்த தொழில்வாய்ப்புக் கணக்கெடுப்பு இறுதி அறிக்கை பிரசுரிக்கப் பட்டதுடன், அது இணையத்தளத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் தொழில்வாய்ப்புக் கணக்கெடுப்பு தரவினை பகுத்தாராய்ந்து, இறுதி அறிக்கையைத் தயாரித்தல்.

- 2018 ஆம் ஆண்டு வருடாந்த தொழில்வாய்ப்புக் கணக்கெடுப்பு இறுதி அறிக்கை பிரசுரிக்கப் பட்டதுடன், அது இணையத்தளத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

- 2017 ஆம் ஆண்டின் சராசரி உழைப்புகள் மற்றும் தொழில் புரிந்த மணித்தியாலங்கள் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு, இணையத்தளத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் சராசரி உழைப்புகள் மற்றும் தொழில்புரிந்த மணித்தியாலங்கள் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு, இணையத்தளத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

- ‘Sri Lanka Employee’ காலாண்டு சஞ்சிகைக்கு நிறுவனங்களிடமிருந்து தரவுகளைச் சேகரித்தல்.

- ஆகக்குறைந்த வேதன வீதச் சுட்டியைக் கணித்தல் - சம்பளச் சபைகளின்படி ஆகக்குறைந்த மாதாந்த வேதனச் வீதச் சுட்டியைக் கணித்து, தகவல் மத்திய வங்கிக்கு அனுப்பபட்டிருந்தது.

- இன்றுவரை பெறப்பட்ட தரவுகளைப் பதிந்து, புதிய ஊ.சே.நி பதிவுகளைக் கணினிமயப்படுத்துதல்.

### நிருவாகச் செயற்பாடுகள்

### பௌதீக வளங்களின் அபிவிருத்தி

தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் அவர்களது கடமைகளை வினைத்திறனுடன் ஆற்றுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்வது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இதன்படி, தொழில் திணைக்களத்தின் காணி மீதான ‘மெஹேவரபியஸ’ கட்டடத்தின் நிருமாணச் செயற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. நிருமாணச் செயற்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டில் உறப்பட்ட செலவீனம் 1524 மில்லியனாகும். 2018.12.31 இல் கட்டடத்தின் பௌதீக முன்னேற்றம் 92.73% ஆகும். அவிசாவெல மற்றும் நீர்கொழும்பு தொழில் அலுவலக நிருமாணச் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

பொலநறுவை மற்றும் புத்தள தொழில் அலுவலகங்களின் நிருமாணச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஹட்டன் தொழில் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**தொழில் அலுவலகங்களின் நிருமாண முன்னேற்றங்கள் பின்வருமாறு:**

| நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | | 2018.01.01. இலிருந்து 2018.09.30 வரையில் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | பௌதீகம் | நிதி ரூபா.மில். | பௌதீகம் | நிதி ரூபா.மில். |
| மெஹேவர பியஸ | 100% | 1742 | 92.73% | 1524.38 |
| குருணாகல் மாவட்ட தொழில் அலுவலகக் கட்டடம் - கட்டம் 2 | 100% | - | 100% | 3 |
| அம்பலாங்கொடை தொழில் அலுவலகக் கட்டடம் - கட்டம் 2 | 95% | 35 | 65% | 35 |
| மஹியங்கனை தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 1 | 100% | 40 | 98% | 40 |
| அனுராதபுர தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 3 | 100% | 4 | 75% | 3 |
| நாவுல தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 1 | 100% | 30 | 80% | 29.99 |
| இரத்தினபுரி தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 1 | 65% | 75 | கேள்வி கோரல் செயன்முறை | - |
| பதுளை தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 1 | 65% | 60 | கேள்வி வழங்கப்பட வுள்ளது | - |
| ஹட்டன் தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - கட்டம் 1 | 75% | 15 | 12% | 15 |
| பொலநறுவை தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - ஆலோசனையை முன் வைத்தல் | 100% | 20 | 100% | 20 |
| புத்தளம் தொழில் அலுவலகக் கட்டட நிருமாணம் - ஆலோசனையை முன் வைத்தல் | 100% | 7 | கேள்வி வழங்கப் பட்டுள்ளது | 6.91 |
| யாழ்ப்பாணம் மற்றும் மீகமுவ அலுவலகங்களுக்கான ஆலோசனையை முன் வைத்தல் | 100% | 8 | யாழ்ப்பாணம் 60% நீர்கொழும்பு – கேள்விச் செயற்பாடுகள் | 7.99 |

**மனித வளங்கள் முகாமைத்துவம்**

பதவியினரை உச்சளவில் பேணுதல் திணைக்களத்தின் கடமைகளை பயறுதிவாய்ந்ததாகவும் வினைத்திறனுடனும் ஆற்றுவதற்கு உதவுகின்றது. இது தொடர்பில் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

- தொழில்நுணுக்கசேவையில் ஆட்சேர்ப்பிற்காக பொது சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுதல்.
- விஞ்ஞான சேவையின் ஆராய்ச்சி அலுவலரின் ஆட்சேர்ப்பு நடைமுறையை பொது சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்புதல்.
- தொழில் ஆணையாளரின் (தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்) ஆட்சேர்ப்பு நடைமுறையை பொது சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக அனுப்புதல்.
- சட்ட அலுவலர்கள், தொழில் அலுவலாகள், சுருக்கெழுத்தாளர்கள், சாரதிகள் அலுவலக வேலையாளர் சேவைப் பதவிகளில் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

- பதவிநிலை அலுவலர்களின் செயலாற்றுகையை அனுப்புதல் (விடய இல.: 1அ,1ஆ,2,3,17)
- சீருடை படிகளை வழங்குதல் (காவலாளிகள் சேவை, சாரதிகள் மற்றும் கே.கே.எஸ்)
- வருடாந்த வேதன ஏற்றத்தை அனுமதித்தல்.
- உதவித் தொழில் ஆணையாளர், பொறியியலாளர் சேவை, தொழில் அலுவலர்கள், மனித வளங்கள் அலுவலர், சாரதிகள் மற்றும் அலுவலக வேலையாளர் சேவைக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சையை நடத்துதல்.
- ஆண்டின் நடுப்பகுதி செயலாற்றுகையை அனுப்புதல்.
- சொத்துக்களிள் மற்றும் பொறுப்பகளின் அறிக்கையை அனுப்புதல்.
- பொது நிருவாக சுற்றிக்கை 2016/03 இன்படி வேதன மாற்றம்.
- திணைக்களத்தினை மீளக்கட்டமைக்கும் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஆரம்ப செயற்பாடுகளை ஆற்றுதல்.

**நூலகம் மற்றும் தகவல் சேவை**

தொழில் திணைக்களத்தின் நூலகத்தின் பிரதான பொறுப்பு, தொழில்தருநர்-பணியாளர் சமூகத்தின் முன்னேற்றம் தொடர்பில் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் விடயத்துடன் தொடர்புபட்ட தகவல்களைச் சேகரித்தல், அத்தகைய அறிவினைப் பரப்புவதற்கு வழி வகுத்தல் மற்றும் பொது மக்களிடையே தொழில் துறை தொடர்பில் பிரச்சாரம் செய்தல் என்பவையாகும்.

- 935 புத்தகங்கள்,வெளியீட்டுக் குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட உள்நாட்டு சஞ்சிகைகள் 93 மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகள் கொள்வனவு செய்தமை.
- 225 பணியாளர்களுக்கு உறுப்புரிமை வழங்கியமை.
- 15,123 புத்தகங்களை இரவலாக வழங்கியமை.
- போட்டோப்பிரதி சேவையைப் பேணுதல்.
- தரவுத்தளத்தை மற்றும் பக்க வரிசைப்படுத்தல் சேவையைப் பராமரித்தல்.

**நிதி முகாமைத்துவம்**

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திணைக்களமானது அதனது நிதி வளங்களை பயனுள்ள வகையில், ஆக்கமுள்ளதாக மற்றும் சிக்கனமாக கையாள முடிந்திருந்தது.

**2018 சனவரி 1 முதல் டிசெம்பர் 31 வரை திணைக்களத்தின் நிதிசார் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித் திட்டம் | செலவின வகை | 2018 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு (ரூபா) | 2018 டிசெம்பர் 31 இலுள்ளவாறான செலவினம் | மீதி (ரூபா) | செலவீன வீதம் |
|---|---|---|---|---|---|
| 221 | மீண்டெழுவது | 1,619,100,000 | 1,614,473,945 | 4,626,055 | 99.71% |
| | மூலதனம் | 2,211,000,000 | 1,813,415,443 | 108,983,671 | 95.07% |

**அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள்**

2018 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின்படி, 07 மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் களஞ்சியம் (வழங்கல் பிரிவு) கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு வினாக்களுக்கு திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களைப் பரிசீலித்ததன் பின்னர் விடையளிக்கப்பட்டிருந்தது.

# 03

# மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12ஆம் திகதிய 1640/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஏற்பாட்டு நியமங்களுக் கமைய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற இந்தத் திணைக்களத்திற்கு அரச வேலைவாய்ப்புச் சேவைகளை பேணி வருகின்ற மற்றும் தேசிய மனித வளங்கள், தொழில்வாய்ப்புக் கொள்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

**தொலைநோக்கு**

உலக தரத்திலான இலங்கையர் தொழிலணி

**செயற்பணி**

அபார தகுதிகளுடன் கூடிய உலகளாவியரீதியிலான போட்டித்தன்மையுடைய செயற்றிறனுள்ள தொழில் அணியினை விருத்தி செய்தல் மற்றும் இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக எமது மனித வளங்களின் முழுமையான ஆற்றலைப் பயன்படுத்துதல்

**இந்த திணைக்களம் பின்வருகின்ற பணிகளை ஆற்றுவதற்குப் பொறுப்புவாய்ந்தது**

- தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையை வகுத்தமைத்து நடைமுறைப்படுத்துதல்.
- வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது மற்றும் மேம்படுத்துவது.
- தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்.
- தொழில் சந்தையின் தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரவச் செய்தல்.
- தொழில் இல்லங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேறு சேவைகள் மற்றும் மேலே உள்ள விடயங்களுடன் தொடர்புபட்டுள்ள மற்றும் இடைநேர் ஏனைய அனைத்து நடவடிக்கைகளும்.

**திணைக்களத்தின் குறிக்கோள்கள்**

1. தேசிய மனிதவலுக் கொள்கையை வகுத்தமைத்தலும் நிகழ்ச்சித்திட்டங்களை நடை முறைப்படுத்துதலும்.
2. பொருந்தாத திறன்கள் என்ற கட்டமைப்புப் பிரச்சினையைத் தீர்த்தல்.
3. தற்போது தொழிலணியிலிருக்கின்ற அனைத்து இலங்கையர்களுக்கும், எதிர்காலத்தில் தொழிலணிக்குள் நுழையவிருக்கின்றவர்களுக்கும் சரியான தொழில்சார் ஆற்றுப் படுத்தலைத் தீர்மானிப்பதற்கு வசதிகளை வழங்குதல்.
4. மனிதவலு வழங்கலைத் திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆரம்பித்தல்.
5. முறைசாரா துறையினை விருத்தி செய்தல்.
6. தனியார் துறையில் தொழில்களைப் பெறுவதற்காக தொழில் நாடுநர்களை ஊக்குவித்தல்.
7. இலவச அரச தொழில் சேவையை வழங்குதல்.
8. பாதிப்படையக்கூடிய குழுமங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பற்ற பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுடன் தொடர்புபட்ட மனிதவலு மற்றும் தொழில் வசதிகளை வழங்குதல்.
9. அனைத்து இலங்கையர்களுக்கும் தொழில் சந்தை பற்றிய சரியான உலக மற்றும் உள்நாட்டுத் தகவல்களை வழங்குதல்.
10. உள்நாட்டு மற்றும் உலக தொழில் சந்தைகளின் போக்குகளைத் திட்டமிடுதல்.

தொழிலின்மையைக் குறைத்து, சீரிய தொழிலை உருவாக்குகின்ற பணியினை நிறைவு செய்வதற்காக அதன் மனித வளங்களைப் பணிக்கமர்த்தி, திணைக்களத்தால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**திணைக்களத்தின் பிரிவுகள்**


- நிருவாக, திட்டமிடல்,ஊக்குவிப்பு மற்றும் தொழிற்பாட்டுப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- மனிதவளங்கள் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
- தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் பிரிவு

**2018 டிசெம்பர் 31 வரையான நிதிசார் முன்னேற்றம்**

| | ஏற்பாடு (ரூ.000) | செலவினம் (ரூ.000) | வீதம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 352,655 | 348,741 | 98.89% |
| மூலதன செலவினம் | 31,100 | 30,395 | 97.74% |
| மொத்தம் | 383,755 | 379,137 | 98.80% |

**தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் பிரிவு**

மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்புத் திணைக்களம், தொழில்நாடுநர்கள், தொழில் சந்தைக்குள் புதிதாக நுழைந்தவர்கள் மற்றும் எதிர்காலத்தில் நுழையவிருக்கின்றவர்களுக்கு தொழில்வாய்ப்புடன் தொடர்புபட்ட உதவிகளை வழங்கும் குறிக்கோளுடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது.




**அரச தொழில்வாய்ப்பு நிலையங்கள் (PES )**

இந்தப் பிரிவு மனிதவலுத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இயங்குகின்றது.

இந்த நிலையங்கள் நாடளாவியரீதியில் 25 மாவட்டங்களிலும் இயங்கி வருவதுடன், தேசிய அரச தொழில்வாய்ப்பு சேவை நிலையம் பத்திரமுல்லை அலுவலக வளாகத்திற்குள் தாபிக்கப்பட்டுள்ளது.

**தொழில்வாய்ப்பு நிலைய வலையமைப்பு**






தலைமை அலுவலகம்
9ஆவது தளம்
சித்சிறிபாய,
2 அவது கட்டம்,
பத்திரமுல்லை.

**அரச தொழில் சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

- தொழில் நாடுநர்களைப் பதிவுசெய்தல்.
- வெற்றிடங்களையும் நிறுவனங்களையும் பதிவுசெய்தல்.
- நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளனவா என்று பார்த்தல்.
- தொழில் நாடுநர்கள் மற்றும் தற்போதிருக்கின்ற வெற்றிடங்கள் பற்றிய அட்வணையைத் தயாரித்தல்.
- தொழில்நாடுநர்களுக்கு நேர்முகப்பரீட்சைகளை நடத்துதல் மற்றும் அவர்களின் தகைமைகளை உறுதிப்படுத்துதல்.
- தொழில் பொருத்தம் மற்றும் நேர்முகப்பரீட்சைகளை அனுப்புதல்.
- தொழில்வாய்ப்பினையும் அதன் தொடர்ச்சியை வழங்குதல்.
- தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- பயிற்சிக்கான வசதிகளை வழங்குதல்.

- தொழில் நிலை பற்றிய புள்ளிவிபரங்களைச் சேகரித்துப் பிரசுரித்தல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான வழிகாட்டல்கள்.
- மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல் மற்றும் ஒழுங்கமைத்தல்.

தொழில் நாடுநர்களின் பதிவினை பல வழிகளில் பதிதல். அவை பற்றிய தகவல்கள், மாவட்ட மட்டத்தில், மனித வளங்கள் அபிவிருத்தி உதவியாளர்கள், தொழில் நாடுநர்கள் மற்றும் தொழில் சேவை நிலையங்களினூடாக சேரித்தல். தொழிலில் ஆவலுள்ளவர்களின் அபிலாசையின் அடிப்படையில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைத்தல்.

இணையத்தள தொழில்வாய்ப்பு சேவை ஏற்பாட்டினூடாகவும் தொழில்தருநர்கள் பதிவினை மேற்கொள்ள முடியும், தொழில்தருநர்களும் தமது தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அங்கு பதிவு செய்ய முடியும்.

அதேபோன்று, தொழில்நாடுகளுக்கு தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படுகப்படுவதுடன், அரச தொழில் வாய்ப்பு நிலையங்களினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பப்படுவதுடன், ‘Career Me’ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை இலவசமாக பங்கெடுப்பதற்கு தொழில்நாடுநர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தொழில்சார் நிபுணர்கள் தமது சேவைகளை வழங்குவதற்கு இந்த இணையத் தளத்தைப் பயன்படுத்தி திணைக்களத்துடன் பதிய முடியும் அத்தகைய தொழில்சார் நிபுணத்துவத்தை அவர்களிடமிருந்து பெற வேண்டிய தேவை யுள்ளவர்கள் அவர்களது தெரிவுகளுக்கு எற்ப அச்சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த சேவையை கையடக்கத்தொலைபேசி பிரயோகமொன்றினூடாகவும் (Mobile App) பெறுவதற்கு மென்பொருள் விருத்திசெய்யப்பட்டிருந்தது. சர்வதேச தொழில் தாபனம், இந்த இணையத்தளத்தை விருத்தி செய்வதற்கான இரண்டு சிறிய கருத்திட்டங்களுக்கு அனுசரணையளித்துள்ளது.

**தொழில் சந்தைத் தகவல் அலகு**

இந்த அலகு, மனிதவலு திட்டமிடுதல், அபிவிருத்தி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. தொழில் சந்தை பற்றிய தகவல்கள், பல்வேறு துறைகளின் கொள்கை ஆக்குநர்கள் அதேபோன்று கல்வித் துறையிலிருக்கின்ற கல்வி நிகழ்ச்சித்திட்ட விருத்தியாளர்கள் மற்றும் பயிற்சி, திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்பவர்கள் போன்றோரினால் தேவைப்படுத்தப்படுகின்றது.

தொழில் சந்தை பற்றிய தகவல்களைக் கூட்டுவதில் மனித வளங்களுக்கான தொழில் சந்தையில் கேள்வி விரைவாக மாறும் திறன்களை நெருக்கமாக கண்காணிப்பது மற்றும் மதிப்பிடுவது அவசியமாகின்றது. மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்புத் திணைக்களம், தொழில் சந்தைபற்றிய தகவல்களை சேகரித்து, பகுத்தாராய்ந்து பரப்பி வருகின்றது. நடத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரங்கள், அதன் கீழ் பிரசுரிக்கப்பட்ட வெளியீடுகள் மனிதவலுத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் எடுத்துக்காட்டப்பட்டன (13 இலிருந்து 21 வரை).

திணைக்களத்தின் தொழில் சந்தை அலகு, தொழில் சந்தைகள் கணக்கெடுப்புகள் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் மீதான ஆராய்ச்சிகள், தொழில் வழங்கல் மற்றும் கேள்வி பற்றிய ஆய்வுகள் அதன் காண்பிப்புகளை பரப்புதல். இந்த அலகு, தொழில் சந்தை சஞ்சிகை மற்றும் பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட கைந்நூலை வெளியிடுகின்றது.

**தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை**

தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை, அரசாங்கத்தின் இடைக்கால அபிவிருத்திக் கொள்கை கட்டுக்கோப்பு என்பதுடன் இணைந்ததாக 2017 ஆம் ஆண்டில் மீளாயப்பட்டது.

- கொள்கையை நடைமுறைப்படுத்துவதுடன் நேரடியாக ஈடுபட்டுள்ளதாக 43 அமைச்சுக்கள் இனங்காணப்பட்டதிலிருந்து 2018 முதல் 2021 வரையான காலப்பகுதி தொடர்பில் கூறப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன.

- 5 அமைச்சுக்கள் பூர்த்திசெய்யப்பட்ட செயற்றிட்டத்தை அனுப்பியுள்ளதுடன், எஞ்சியிருக் கின்ற 8 அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தை நாளதுவரைப்படுத்து வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் நடைமுறையிலிருக்கின்றன.

- கொள்கையில் ஈடுபட்டுள்ள அமைச்சர்களினால் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகளின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பது மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை தொழிற்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்றிட்டத்திற்குத் தேவையான ஒத்துழைப்பினைப் பட்டியலிட்டு பயிற்சிப்பட்டறையொன்றினை ஒழுங்குபடுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன, ஆனால் கடந்த ஆண்டின் இறுதி காலாண்டு பகுதியில் இடம் பெற்றிருந்த நெருக்கடிகள், அமைச்சுக்களில் தொடர்ச்சியான மாற்றங்கள் காரணமாக அது பிற்போடப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளைக் குறைப்பதற்கு, இச்செயன்முறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்களை வழிகாட்டுதல், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் இணைந்தும் கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தேவைப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன வரைவு தயாரிக்கப்பட்டு, எமது வரிசை அமைச்சிற்கு தேவையான நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டிருந்தது.

இதன் தொழிற்பாட்டு தன்மைகளை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ்வருகின்ற தேசிய மனித வளங்கள் அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைத்து, முன்னேற்ற மதிப்பீட்டை மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்தினூடாக நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அனைத்து அமைச்சுக்களின் ஒருங்கிணைப்புடன் தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில், ஒவ்வொரு நிறுவனமும் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இணைய முறைமை விருத்திசெய்யப்பட்டுள்ளதுடன், இந்த நோக்கத்திற்கு தேவைப்பட்ட கணினி முறைமை நிறுவப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேவைப்பட்ட அத்தியவசிய மேவுகை சாதனம் சர்வதேச தொழில் தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளது. ICTA யினால் தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திரட்டு (Government Cloud) இந்த மென்பொருளை செயற்படுத்துவதனை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளது.

**திணைக்கள நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2018.01.01 – 2018.12.31 வரையான முன்னேற்றம் | | பயனாளா ிகளின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். | |
| **தொழில்வாய்ப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் பிரிவு** | | | | | | |
| 1 | க.பொ.தா சா.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1865 | 1.054 | 2160 | 0.948 | 54787 |
| 2 | க.பொ.தா உ.த. மாணவர்களுக்கான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 1328 | 1.105 | 1402 | 0.991 | 37546 |
| 3 | சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 311 | 0.947 | 384 | 0.804 | 11545 |
| 4 | தொழில்சார் சவால்களிலிருந்து வெளிவருதல் | 150 | 0.794 | 149 | 0.679 | 4655 |
| 5 | உள்வாரி/வெளிவாரி பல்கலைக் கழக மாணவர்களுக்கான தொழில் சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 20 | 0.739 | 20 | 0.684 | 789 |
| 6 | ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 23 | 0.637 | 25 | 0.601 | 1002 |
| 7 | பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 300 | 0.959 | 348 | 0.794 | 19534 |
| 8 | 'ஹசற'சஞ்சிகையை அச்சிடுதல் | 3 | 0.450 | 1 | 0.182 | - |
| 9 | தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 25 | 0.541 | 36 | 0.515 | 1145 |
| 10 | சமூக தொழில் நிகழ்ச்சித்திட்டம் | 48 | 0.458 | 77 | 0.462 | 7602 |
| 11 | அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 240 | 1.687 | 288 | 1.559 | 9773 |
| 12 | தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டம் | 3 | 0.105 | 3 | 0.097 | 123 |
| **மனிதவளத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு** | | | | | | |
| 13 | மனிதவலுப் பணியாளர்களின் தொழில் வெட்டுமுகம் | 100% | 0.500 | 75% | 0.340 | - |
| 14 | வாகன வாடகைத் தொழிலில் மனித வளங்களைப் பயன்படுத்துவது பற்றிய கணக்கெடுப்பு | 100% | 0.025 | 75% | - | - |
| 15 | அரச துறையில் தொழில்சார் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு (i) | 100% | 0.095 | 100% | 0.094 | - |
| 16 | மீன்பிடித் துறையின் தொழில் வெட்டுமுகத்தை ஆய்தல் | 100% | 0.050 | 100% | 0.050 | - |
| 17 | அரச துறையில் தொழில்சார் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு (ii) | 100% | 0.175 | 100% | 0.190 | - |
| 18 | வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வு (விரிவான அறிக்கை) | 100% | - | 100% | - | - |
| 19 | சுய தொழில் சந்தை தகவல் சஞ்சிகை மற்றும் இறுவட்டு | 100% | 0.083 | 100% | 0.082 | - |
| 20 | தொழில் சந்தை தகவல் சமாஜம் | 100% | 0.822 | 100% | 0.744 | - |
| 21 | சமூக, பொருளாதார தரவு கைநூல் | 100% | 0.750 | 100% | 0.722 | - |
| **அரச தொழில் சேவைகள் நிலையம்** | | | | | | |
| 22 | மாவட்ட தொழிலவாய்ப்பு நிலையங்களைத் தாபித்தலும் தரமுயர்த்துதலும் | 4 | 2.750 | 4 | 3.169 | - |

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2018.01.01 – 2018.12.31 வரையான முன்னேற்றம் | | பயனாளா ிகளின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா. மில். | பௌதீகம் | நிதி ரூபா. மில். | |
| 23 | மாவட்ட தொழிற் சந்தைகளை நடத்துதல் | 7 | 1.000 | 7 | 1.267 | 6615 |
| 24 | தொழிலை விரும்புவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | 150 | 0.750 | 197 | 0.715 | 7597 |
| 25 | WAPES உறுப்புரிமை | 100% | 0.500 | | 0.311 | - |
| 26 | அரச தொழில் சேவையைப் பராமரித்தல் | 100% | | 100% | | |
| | தொழிலை நாடுவேரைப் பதிவு செய்தல் | 371908 | | 121016 | | |
| | தொழில் வெற்றிடங்களைப் பதிவு செய்தல் | 35402 | | 31933 | | |
| | பொருத்தமான தொழில் | | | 27546 | | |
| | தொழிலுக்கு அமர்த்துதல் (பயனாளிகள்) | 24097 | 1.354 | 12807 | 1.374 | |
| 27 | தொழில்தருநர் சமாஜங்களை நடத்துதல் | 19 | 0.346 | 14 | 0.286 | |
| 28 | கம்பனிகள் மற்றும் தொழில் நாடுநர்களுக்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 0.300 | 35 | 0.300 | - |
| | **முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)** | | | | | |
| 29 | வர்த்தக பகுப்பாய்வு கற்கை | 100% | 0.500 | 90% | 0.515 | - |
| 30 | தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் கள அலுவலர்களுக்கான மணிக் கணினிகளைக் கொள்வனவு செய்தல் | 100% | 5.000 | 100% | 4.925 | 47 |
| | **சீரிய வேலை** | | | | | |
| 31 | தேசிய மனித வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் | 100% | - | 20% | 0.005 | - |
| 32 | 'லக் றகியா ஹறசர' நிகழ்ச்சித்திட்டம்* | 100% | 2.160 | 100% | 1.833 | - |
| 33 | தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 10 | 0.337 | 13 | 0.337 | 484 |
| 34 | நுவரெலியா மாவட்ட தொழில்வாய்ப்பு நிலையத்தின் அங்குரார்ப்பணம்* | 100% | 0.902 | 100% | 0.772 | - |
| 35 | கொரிய இராஜதந்திர பணியகத்தின் தலையீட்டுடன் தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய கொள்கை கலந்தாலோசனை நிகழ்ச்சித்திட்டம் * | 100% | 0.128 | 100% | 0.128 | - |
| 36 | விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலான தேவை* | 9 | 0.204 | 9 | 0.205 | 381 |

தேசிய மனிதவளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எற்பாடுகளின் கீழ் செயற்றிட்டம் (*)

**2018/12/31வரை பணிக்கமர்த்துவதில் முன்னேற்றம்**

| | மாவட்டம் | நேரடியாக பணிக்கமர்த்துதல் | | சுயதொழில்வாய்ப்பு / தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் |
|---|---|---|---|---|
| | | அரச தொழில் சேவை நிலையத்தினூடாக | பிரதேச செயலாளர் பிரிவில் | |
| 01 | கொழும்பு | 408 | 294 | 15 |
| 02 | கம்பஹா | 349 | 352 | 92 |
| 03 | களுத்துறை | 205 | 589 | 64 |
| 04 | கண்டி | 490 | 427 | 63 |
| 05 | மாத்தளை | 139 | 172 | 6 |
| 06 | நுவரெலியா | 0 | 131 | 0 |
| 07 | காலி | 176 | 409 | 115 |
| 08 | மாத்தறை | 163 | 496 | 90 |
| 09 | அம்பாந்தோட்டை | 236 | 365 | 57 |
| 10 | யாழ்ப்பாணம் | 442 | 259 | 206 |
| 11 | மன்னார் | 105 | 76 | 49 |
| 12 | வவுனியா | 148 | 68 | 38 |
| 13 | முல்லைத்தீவு | 24 | 0 | 20 |
| 14 | கிளிநொச்சி | 32 | 78 | 80 |
| 15 | மட்டக்களப்பு | 113 | 122 | 206 |
| 16 | அம்பாறை | 277 | 447 | 442 |
| 17 | திருகோணமலை | 113 | 61 | 116 |
| 18 | குருணாகல் | 511 | 1196 | 521 |
| 19 | புத்தளம் | 31 | 242 | 109 |
| 20 | அனுராதபுரம் | 165 | 112 | 65 |
| 21 | பொலநறுவை | 150 | 50 | 38 |
| 22 | பதுளை | 561 | 126 | 104 |
| 23 | மொனாறாகலை | 118 | 147 | 10 |
| 24 | இரத்தினபுரி | 192 | 394 | 131 |
| 25 | கேகாலை | 626 | 420 | 116 |
| | **மொத்தம்** | **5774** | **7033** | **2753** |

**மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் -2018**

| மாவட்டம் | அமைவிடம் | நடைபெற்ற திகதி | தொழில் நாடுநரின் எண்ணிக்கை | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | பொருத்தமான தொழில் |
|---|---|---|---|---|---|---|
| மாத்தளை | 549 | 13 | 02 | 44 | 313 | 107,670 |
| அம்பாறை | 1876 | 12 | 06 | 68 | 516 | 94,500 |
| அனுராதபுரம் | 425 | 25 | 6 | 42 | 214 | 123,055 |
| யாழ்ப்பாணம் | 985 | 33 | 10 | 191 | 479 | 144,100 |
| பதுளை | 1350 | 34 | 08 | 163 | 563 | 298,500 |
| இரத்தினபுரி | 645 | 30 | 10 | 114 | 771 | 207,042 |
| வவுனியா | 785 | 20 | 09 | 28 | 85 | 161,908 |
| மொத்தம் | **6615** | **167** | **51** | **650** | **2941** | **1,136,775** |

**தொழில்தருநர்களுடன் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டம்**

| திகதி | இடம் | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | செலவினத் தலைப்பு | செலவினம் ரூபா |
|---|---|---|---|---|
| **முதலீட்டுச்சபை பதிவுசெய்துள்ள தொழில்முயற்சிகளுடனான கலந்துரையாடல்கள்** | | | | |
| 2018 பெப்ரவரி 27 | வியகம | 14 | - | - |
| 2018 ஏப்பிரல் 02 | கட்டுநாயக | 13 | 2 2509 | 1,180.00 |
| 2018 ஏப்பிரல் 27 | பள்ளேகல்ல | 18 | 2 2509 | 650.00 |
| 2018 மே 30 | வத்துபிட்டிவள | 10 | 2 2509 | 1,145.00 |
| **மாவட்ட தொழில்முயற்சியாளர் கருத்தரங்குகள்** | | | | |
| 2018 ஏப்பிரல் 18 | அம்பாறை | 8 | 11 2509 | 11,625.53 |
| 2018 ஏப்பிரல் 26 | களுத்துறை | 52 | 2 2509 | 35,450.00 |
| 2018 யூன் 12 | கொழும்பு | 25 | 2 2509 | 59,590.00 |
| 2018 யூன் 20 | யாழ்ப்பாணம் | 35 | 11 2509 | 32,500.00 |
| 2018 யூன் 25 | கம்பஹா | 47 | 2 2509 | 51,100.00 |
| 2018 யூலை 25 | மாத்தறை | 74 | 2 2509 | 40,710.00 |
| 2018 செப்ரெம்பர் 13 | இரத்தினபுரி | 43 | 2 2509 | 46,080.00 |

இந்த முயற்சியின் அடிப்படைக் குறிக்கோள், தொழில்தருநர்கள், மாவட்ட தொழில் நிலையங்கள் மற்றும் தேசிய தொழில் நிலையங்கள் ஆகியவற்றுக்கிடையிலான அதாவது திணைக்களத்திற்கும் திணைக்களத்திற்கு சேவைகளை வழங்கக்கூடிய தொழில்தருநர்களுக்குமிடையில் சிறந்த உறவு முறையினைத் தாபிப்பதனூடாக, தொழில்வாய்ப்பு சேவைகளைப் பெறுவதாகும்.

**'லக் றக்கியாவ' நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் 2018 டிசெம்பர் 13 ஆம் திகதி சிசுறுபாய பிரதான மண்டபத்தில் நடை பெற்றிருந்தது. இது தொழில்நாடுநர்கள், தொழில்தருநர்கள் மற்றும் திணைக்களத்தின் பதவியினர் ஆகிய முத்தரப்பினரின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னேடிக் கருத்திட்டமாகும். தொழில்களை மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவது தொடர்பில் கருத்திட்டம் தொழில் தருநர்களால் மதிப்பிடப்பட்டிருந்தது.அதேபோன்று,திணைக்களத்தின் பணியாளர்கள், குறிப்பாக தொழில்நாடுநர்களை தொழிலுக்கமர்த்துவது தொடர்பில் செயற்றிட்டத்தின் இலக்குகளை அடைவது தொடர்பாக மதிப்பிட்டிருந்தனர். இந்நிகழ்ச்சித்திட்டம், திணைக்களத்தின் மனித வளங்களைப் ஆகக்கூடியளவில் பயன்படுத்தி உச்ச விளைதிறனை அடைவதற்கு ஒவ்வொரு பணியாளர்களின் ஆற்றல்களையும் சாதகமான இலக்காகக் கொள்கின்றது. தொழில்தருநர்கள் மற்றும் திணைக்களத்தின் பணியாளர்கள் மாவட்ட மட்டத்தில மதிப்பிட்ட பெறுமதி மற்றும் யாழ்ப்பாணம், குருணாகல், அம்பாறை ஆகிய தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களில் தொழில்தருநர் நிறுவனங்கள் மதிப்பிடப்பட்டிருந்தன. இந்த கருத்திட்டம், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், ஏற்பாடுகள் 2019-2021 இடைக்கால வரவுசெலவுத்திட்டத்திலிருந்து பரிந்துரைக்கப்பட்டது.

**கொரிய அரசாங்கத்தின் தலையீட்டுடன் தொழில்வாய்ப்பு மற்றும் மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்**

கொரிய குடியரசு, தொழில்வாய்ப்பு மற்றம் தொழில் துறை மீது இருதரப்பு உறவுமுறையினை பேணுவதில் இலங்கைக்கு விசேட முக்கியத்துவத்தை வழங்கியுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டில், கொரிய தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு, ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சுடன் ஆரம்பித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில், பேராசிரியர்கள் மற்றும் தொழில்வாய்ப்பு, தொழில் வழிகாட்டல், திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் அரச தொழில்வாய்ப்பு சேவையை மதிப்பிடுதல் போன்றவற்றில் பல நிபுணர்களை உள்ளடக்கிய

கொரிய தூதுக்குழு இலங்கைக்கு விஜயமொன்றை மேற் கொண்டிருந்தது. விஜயத்தின்போது, தொழில்வாய்ப்பு மற்றும் அரச தொழில்வாய்ப்பு சேவை பற்றிய இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்த மொன்று இலங்கை அரசாங்கத்திற்கு கொரிய குடியரசுக்குமிடையில் கைச்சத்திடப்பட்டது. அரச தொழில்வாய்ப்பு சேவையின் கட்டமைப்பு, தொழில் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் இணையத்தில் அரச தொழில் சேவைகளை வழங்குதல் பற்றி கொரியாவின் அனுபவங்கள் திணைக்கத்துடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன. திணைக்களமும் கொரியாவின் அரச தொழில்வாய்ப்புச் சேவையின் பாரிய மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கைக்கொள்ளப்பட்ட நடவடிக்கை களைச் சுருக்கமாகத் தெரிவித்திருந்தது. கொரியாவின் மாதிரியை மதிப்பிடுவதன் அடிப்படையில் கொரியாவுடனான கலந்துரையாடலுடன் இலங்கையில் அரச தொழில்வாய்ப்பு சேவையைச் செம்மைப்படுத்துவதற்கு செயற்றிட்டமொன்றை வகுத்தமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**மாவட்ட தொழில் நிலையத்தை ஆரம்பித்தல் - நுவரெலிய மாவட்டம்**

பிரதான குறிக்கோள்கள் மாவட்டத்தில் இளைஞருக்கான தொழில்வாய்ப்பின்மையைக் குறைத்தல், தொழில்நாருநர்களைப் பதிவு செய்தல், பொருத்தமான தொழிலும் தொழிலுக்கமர்த்துதலும், தொழில் சந்தை பற்றி தொழில்நாடுநர்களுக்கிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் தொழில் தருநர்கள் தமக்கு விரும்பிய தொழிலைத் தெரிவுசெய்வதற்குத் தூண்டுவதற்கு அவர்களுக்கு பயிற்சி யளிக்கின்ற நிறுவகங்களை அறிமுகப்படுத்துதல். இந்நிலையம் தொழில்வாய்ப்பு தொடர்புபட்ட அனைத்து சேவைகளையும் வழங்கும். இது, 2018 ஆம் ஆண்டின் சீரிய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தித் தாபிக்கப்பட்டிருந்தது.

# தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலகரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 06 ஆம் திகதி 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்நிறுவகம், தொழில்தருநர்கள், தொழில்தருநர்கள் மற்றும் அரச ஊழியர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழிற் சங்கங்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

தொழில் சட்டவாக்கங்கள், ஒழுங்கு விதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப்பெற்றுள்ள திறன்மிக்க பலம்வாய்ந்த ஊழியர் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடிவமைத்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் வழிநடத்துதல் போன்றவை இந்த நிறுவகத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

இந்த செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில், பின்வருகின்ற பிரதான பிரிவுகள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தில் தொழிற்படுகின்றன

i) பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

ii) ஆராய்ச்சி, திட்டமிடல் மற்றும் வெளியீட்டுப் பிரிவு

iii) நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு

**2018-01-01 இலிருந்து 2018-12-31 வரை நடத்தப்பட்ட முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டங்களின் விபரம் | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | எதிர்பார்த்த வருமானம் (ரூபா) | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|
| டிப்ளோமா பாடநெறி | 6 | 7,155,000.00 | 4 | 5,117,000.00 |
| ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 66 | 2,535,000.00 | 43 | 2,583,600.00 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 43 | 5,670,000.00 | 39 | 3,606,000.00 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 14 | 2,160,000.00 | 14 | 1,802,400.00 |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | 600,000.00 | 4 | 1,317,500.00 |
| சான்றிதழ் பாடநெறி | 13 | 2,535,000.00 | 14 | 2,753,900.00 |
| நன்கொடை நிதியங்கள் | 1 | 800,000.00 | 1 | 12,498,320.00 |
| பயிற்சிப்பட்டறைகள் | 12 | 7,480,000.00 | 14 | 5,610,000.00 |
| பரீட்சைகளை நடத்துதல் | 18 | 720,000.00 | 16 | 3,131,109.54 |
| ஆய்வுக் கருத்திட்டங்கள் | 15 | 675,000.00 | 35 | 3,210,630.00 |

**2018 ஆம் ஆண்டின் விசேட செயற்பாடுகள்**

இதன்படி, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், கொழும்பில் இது தொடர்பில் 04 சிங்கள மொழி மூல கற்கைநெறிகள், 01 தமிழ் மொழி மூல கற்கை நெறி மற்றும் 01 ஆங்கில மொழிமூல கற்கை நெறி மற்றும் குருணாகலில் 2 சிங்கள மொழி மூல கற்கைநெறிகள், பொலகொல்ல கூட்டுறவு நிறுவகத்தில் 01 சிங்கள கற்கைநெறி மற்றும் மட்டக்களப்பில் 02 தமிழ் கற்கைநெறிகள் என்று மொத்தம் 10 கற்கைநெறிகளை நடத்தியுள்ளது.

**சமுர்த்தி அலுவலர்களுக்கான டிப்புளோமா கற்கைநெறி**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து, மனித வளங்கள் அபிவிருத்தி டிப்புளோமா கற்கைநெறிகள் விசேடமா சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 12 மாதிரிகள் மற்றும் 03 சான்றிதழ் கற்கைநெறிகளுடன் நிறைவுசெய்யப்பட்டிருந்தது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணக்களத்தின் தலைமை அலுவலகம், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்றவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணக்களத்தினால் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட 2,550,000 ரூபாவினைப் பயன்படுத்தி இந்த கற்கைநெறிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 05

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு நிறுவகமாக உருவாக்கப்பட்டது.

**தொலைநோக்கு**

அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்

**செயற்பணி**

வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில்வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்பாடுகளும்**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமாக் கற்கைநெறிகள்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிகள்.
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்
- இயந்திரங்களுக்குக் கரியிடும் தொழிலாளர்களுக்கான பயிற்சி
- கைத்தொழில்கள் தொடர்பான தொழிற் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம்
- கைத்தொழில் துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- அலுவலகப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- இரசாயனங்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்
- உணவு நுகர்வோருக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- மனவழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

1.சூழலியல் கண்காணிப்பு சேவைகள்

- உள்ளகக் காற்றின் தரத்தை அளவிடுவதற்கு உள்ள வாயு தர உபகரணத்தையும் பல்வேறு வாயுக்களை கவனத்தில்கொண்டு அவற்றை அளவிடுவதற்கு 'புளு' வாயு பகுப்பாய்வு மாணியையும் பயன்படுத்துதல்.
- தொழிற்சாலையிலுள்ள உள்ள தூசி மட்டத்தைச் கண்காணிப்பதற்கு தூசி உறுஞ்சும் உபகரணத்தைப் பயன்படுத்துதல்.
- ஒலி மற்றும் சத்த மட்டத்தினைப் பரிசோதிப்பதற்கு ஒலி மட்ட மாணியைப் பயன்படுத்துதல்.
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதிப்பதற்கு வெப்ப அழுத்த மாணியைப் பயன்படுத்துதல்.

2. மருத்துவ பரிசோதனைகள்
    - கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
    - பார்க்கும் திறன் பற்றிய சோதனை
    - இரத்தப் பரிசோதனை
    - தொழில்புரிவதற்கான தகுதியை மதிப்பிடுவதற்கான பரிசோதனை
    - நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை

3. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் இடைநேர் முகாமைத்துவம் மற்றும் நிருவாக சேவைகள்

**2018.01.01 முதல் 2018.12.31 வரை தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதி,பௌதீக முன்னேற்றம்**

| | நடத்தப்பட்ட பாடநெறிகள் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா மில்.) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா பாடநெறி | 02 | 102 | 9.84 |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 04 | 128 | 5.95 |
| 03 | நிருமணத் துறையினருக்கான இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 18 | 0.18 |
| 04 | கழிவு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 02 | 51 | 0.23 |
| 05 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய இரண்டு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - சிங்கர் லிமிடெட் | 01 | 62 | 0.50 |
| 06 | கொதிகலன் பாதுகாப்புப் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 17 | 0.06 |
| 07 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி புடைவைத் துறைக்கு ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 23 | 0.09 |
| 08 | அக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 85 | 0.30 |
| 09 | ISO 14001 தரம் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 01 | 40 | 0.20 |
| 10 | மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பாதுகாப்புப் பயிற்சிப்பட்டறை | 01 | 10 | 0.04 |
| 11 | இரசாயனப் பொருட்களின் பாதுகாப்பான பயன்பாடு பற்றிய ஒரு நாள் பயிற்சிப் பட்டறை | 01 | 43 | 0.15 |
| 12 | மின்சார பாதுகாப்புப் பற்றி இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை | 02 | 41 | 0.41 |

**விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 13 | தொழிற் சங்கங்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்பணர்வு நிகழ்சித்திட்டமொன்றை நடத்துதல் | 2018 ஒக்டோபர் 08 |
| 14 | பத்திரிகையாளர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்சித்திட்டமொன்றை நடத்துதல் | 2018 ஒக்டோபர் 09 |
| 15 | TVAC நிறுவகத்திற்கு தொழில்சார் பாதுகாப்பு பற்றிய சான்றிதழ் கற்கைநெறியினை நடத்துதல் | 2018 செப்ரெம்பர் 21 |
| 16 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்சித்திட்டமொன்று பாதுக்கை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. | 2018 மே 18 |
| 17 | கௌதம் வித்தியாலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான கண்காட்சியில் தே.தொ.பா.சு.நிறுவகம் பங்குபற்றியிருந்ததுடன், மாணவர்களுக்கு முதலுதவி பற்றி விரிவுரையாற்றியிருந்தனர். | 2018 யூன் 29 |
| 18 | நிருமாணத் துறையினருக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 2018 நவம்பர் 29 |

**நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்**

**சூழல்சார் அளவீடுகளை எடுத்தல்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாற்றுகின்ற சூழல் பற்றிய அளவீடுகளையும், அறிக்கைகளையும் வழங்குகின்றது. வேலையாற்றுகின்ற சூழலின் சத்தம், வெளிச்சம் மற்றும் வெப்ப மட்டங்கள் பரிசோதிக்கப்படுவதுடன், தூசு துகள்களின் மட்டத்தை கண்காணிப்பதற்கு மற்றும் நச்சு வாயுக்களின் செறிவினை அளவிடுவதற்கும் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சூழல் பரிசோதனைகள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன:

| சூழல்சார் பரிசோதனைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சத்தம் | 170 |
| வெளிச்சம் | 165 |
| வெப்பம் | 160 |
| தூசு | 169 |
| வாயு (புகை) | 130 |
| வாயு பரிசோதனை | 130 |

**இடரினை மதிப்பிடுதல்**

நிறுவனங்கள் இடர் மதிப்பீடுகளை நடத்துவதற்கு விஜயம் செய்திருந்தன. 2018 ஆம் ஆண்டில், அத்தகைய 10 பரிசோதனைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 40 நடத்தப்பட்டிருந்தன.

**தொழில்சார் பாதுகாப்பினைச் செம்மைப்படுத்துவதற்கு தேயிலை /இறப்பர் பெருந்தோட்டங்களுடன் இணைந்த சர்வதேச தொழில் தாபன நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம், சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி உதவியுடன் 2018 பெப்ரவரி மாதத்தில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இறப்பர் தோட்டங்களில் தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற் காக விசேட பயிற்சிப்பட்டறையொன்று நடத்தப்பட்டது. அதன் முதற் படியாக, தோட்ட அத்தியேட்சகர்களுக்கு அறிவூட்டுவதற்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

தேயிலை மற்றும் இறப்பரை அடிப்படையாகக்கொண்ட தொழிற்றுறைகளின் சிரேஷ்ட முகாமையாளர் களுக்கிடையில் விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு 3 நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்பற்றப் பட்டிருந்ததுடன், ஒவ்வொன்றிலும் 50 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். கம்பனியால் கைக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி விளக்குவதற்கு 'யுலிவர் லிமிடெட்' தொழிற் சாலைக்கு விஜயம் செய்யப்பட்டது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஆய்வு, அந்த தோட்டங்களால் கைக்கொள்ளப் படுகின்ற பாதுகாப்பு முறைகள் பற்றி ஆய்வதற்காக 38 தோட்டங்களில் நடத்தப்பட்டிருந்தது. அதன்பேரில் அனைத்து தோட்ட அத்தியேட்சகர்களுக்கும் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டு, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு கைக்கொள்வதற்கான நடவடிக்கைகள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. பெருந்தோட்ட அத்தியேட்சகர்களுக்கு விசேட கையுறைகள் வழங்கப்பட்டிருந்தன.

மேலும், தேயிலை பிடுங்கும் உபகரணம், இரசாயனங்களைக் கையாள்பவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு கருவிகள் 'கிக்கியானகந்த' மற்றும் 'ஓபாதா' பெருந்தோட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த துடன், பாதுகாப்பு கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி நிகழ்வாக செய்முறை அறிவு மீது கவனஞ்செலுத்துகின்ற சர்வதேச தொழில் தாபன நிபுணர்களால் மூன்று நாள் பயிற்சிப்பட்டறையொன்றும் நடத்தப்பட்டிருந்தது.

**சிறுவர்களுக்கு தொழில்சார் காதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், பாதுக்க ஆனந்த சமரக்கோன் கனிஷ்ட வித்தியாலயத்தில் 2018 மே 18 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி சிறுவர்களிடையே விழிப்புணர்வினை எற்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது. அந்தப் பிரதேசத்தின் பல பாடசாலைகளிலுமிருந்து 100 இற்கும் அதிகமான பிள்ளைககள் பங்குற்றிய நிகழ்ச்சித்திட்டத்தின் வளஆளர்களாக இரண்டு நிபுணத்துவம்வாய்ந்த விரிவுரையாளர்கள் சமூகமளித்திருந்தனர். சிறுவர்களுக்கு மேலதிகமாக, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர். பிரதான தலைப்பிற்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் அபாயங்கள் பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கு அறிவூட்டப்பட்டது. பங்குபற்றிய அனைத்து சிறுவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

**பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துவது மற்றும் முதலுதவி பற்றிய விரிவுரை பற்றிய ஒரு நாள் கண்காட்சி**

பாடசாலையின் விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு கௌதம் வித்தியாலயத்தில் நடைபெற்ற கண்காட்சியில் கண்காட்சிக் கூடமொன்று அமைக்கப்பட்டிருந்தது. எண்ணிக்கையான பாடசாலைகளி லிருந்து நிகழ்வில் மாணவர்கள் பங்குபற்றியிருந்ததுடன், அவர்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்படக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. திடிரென்று தீ பரவுகின்ற சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் தீயணைக்கும் கருவியை உபயோகிப்பது பற்றியும் மாணவர்களுக்கு அறிவூட்டப்பட்டிருந்தது. இதற்கும் மேலதிகமாக, பாடசாலைப் பிள்ளகளின் நன்மைக்காக முதலுதவிச் சிகிச்சை பற்றிய விரிவுரையும் ஆற்றப்பட்டது.

**“சீரிய வேலையின்’ கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் சிறுவர்களின் பாதுகாப்பு பற்றி அறிவின அதிகரிப்பதற்கு MAS Kreeda வின் பங்கேற்புடன் ஒக்டோபர் 30 ஆம் திகதி துல்கிரிய MAS நிறுவகத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட பல பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டமை மதிப்பளிக்கத்தக்க பண்பாக இருந்தது. இந்த நிகழ்சித்திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலைப் பிள்ளைகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது பங்களிப்பினை நல்கியிருந்தனர். நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியாக சித்திரம் வரைதல் போட்டியொன்று நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பாடசாலையில் தமது சொந்தப் பாதுகாப்பினையும், அதேபோன்ற ஏனையவர்களது பாதுகாப்பினையும் கைக்கொள்ளவேண்டிய நடவடிக்கை பற்றி சிறுவர்களுக்கு அறிவூட்டுவதற்கு பல விரிவுரைகள் ஆற்றப்பட்டிருந்ததுடன், பங்குபற்றிய அனைவருக்கும் பாதுகாப்பு பற்றிய கையேடொன்று வழங்கப்பட்டிருந்தது. பாடசாலைகளின் ஒத்திசைவுடன் வேலையாற்றுகின்ற இந்த நிகழ்சித்திட்டத்தை நாடளாவியரீதியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித் திட்டத்தின் கவனம் பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் அவர்களது பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்ததன் பின்னர் அவர்கள் வேலைக்குச் செல்கையில் தொழில்சார் பாதுகாப்பு பற்றிய அறிவினை எற்படுத்துவதாகும். அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் துல்கிரிய விலிருந்து பாடசாலைச் சிறுவர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

**தேசிய பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்கள் தாபனம் - 2018.09.17**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக உறுப்புரிமை நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பண வைபவம், ஹல்டன் ஹொட்டலில் நடைபெற்றிருந்ததுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக உறுப்புரிமையைப் பெறுவது பற்றி உறுப்பினர்களுக்கு சுருக்கமாக விளக்கப்பட்டது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக உறுப்புரிமையைப் பெறுவதன் பிரதிபலன்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் அறிவூட்டப்பட்டது.

**பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் பற்றிய விரிவுரை**

இந்த விரிவுரை, பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்சார் பாதுகாப்புடன் தொடர்புபட்ட பல்வேறு தொழிற்றுறைகளுள் தொழில்சார் வல்லுநர்களுக்காக தொழில்சார் பாதுகாப்புப் பற்றிய அனைத்துத் தன்மைகள் பற்றிய அறிவினை ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டது.

**‘சி.ஐ.சி ஆக்றோ புறடக்ற் லிமிடெட்டின்’ பணியாளர்களுக்கு சரியான நிலையை எடுத்துப் பயன்படுத்துவது பற்றி ஒரு நாள் பயிற்சிப்பட்டறையொன்று நடத்தப்பட்டது.**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், ‘சி.ஐ.சி’ பணியாளர்களுக்கு சரியான நிலையை எடுப்பது பற்றிய பயிற்சிப்பட்டறையை 2018.10.18 ஆம் திகதி நடத்தியிருந்தது. தமது கடமைகளை ஆற்றுகையில் சரியான நிலையினை எடுத்துப் பேணுவதன் முக்கியத்துவம் பணியாளர் களுக்கு தெரியச்செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 50 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதற்கு மேவதிகமாக மேற்பர்வையிடல் பயிற்சி நிகழ்ச்சித்திட்மொன்று 2018 டிசெம்பர் 11 ஆம் திகதி மேற்பார்வையாளர்களுக்கு நடத்தப்பட்டிருந்ததுடன், பெருந்தோட்டத்துறையின் தொழில்சார் பாதுகாப்பு அலவலர்களுக்காக இரண்டு கையேடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்**

வேலைத் தளங்களில் பணியாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தை பணியாளர்களின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரமாக அமைச்சரவை குறித்தொதுக்கியுள்ளது.

**குறிக்கோள்கள்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் இந்த வருடம் 02 ஒக்டோபர் முதல் 09 ஒக்டோபர் வரை நடைபெற்றிருந்ததுடன், பின்வருகின்ற செயற்பாடுகள் இந்த வாரத்தின் பகுதியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கருத்தரங்கு கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது.
2. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான டிப்புளோமா வழங்கல் வைபவம் 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதிநடத்தப்பட்டிருந்தது.
3. தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி நடத்தப்பட்டது.
4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் 2018 ஒக்டோபர் 09 ஆம் திகதி நடத்தப்பட்டது.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கருத்தரங்கு**

இந்த கருத்தரங்கு, கொழும்பு ஹலதாரி ஹொட்டலில் 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி மு.ப 9.00 ஆம் திகதி நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கின் கருப்பொருள், தொழில்சார் பாதுகாப்பு, சுகாதார முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்துவது மற்றும் தொழில்சார் விபத்துக்களுக்கு தயாராக இருத்தல் என்பவையாக இருந்தது. இதன் பிரதான குறிக்கோள், வேலையாளர்களின் பாதுகாப் பினையும், தற்காப்பினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏனைய நாடுகளில் நடைமுறைப்படத்தப்படுகின்ற புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய படிமுறைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் பங்குபற்றுநர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும், அறிவினை ஊட்டுவது மாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளஆளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டிருந்தது. 350 இற்கும் மேற்பட்ட தொழிற்றுறை உரிமையாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள், தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவரும் இந்த கருத்தரங்கில் பங்கெடுத்திருந்தனர்.

**தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகத்திற்கு வான் ஒன்றினைக் கொள்வனவு செய்தமை**

தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகத்தினால் மேலும் விரிவாக்கப்பட்ட சேவை களுக்காகவும், நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு செல்வதற்காகவும் வான் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

# வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தளத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. வேலையாளர் நட்ட ஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நீதித்துறை அலுவலர்களான வேலையாளர் நட்ட ஈட்டுஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்ட ஈட்டுஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்கள், நட்டஈட்டு ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகளும் இலங்கையின் கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி ஒன்றும் இலங்கை நிருவாக சேவையின் பதவியொன்றும் உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகம் வழக்குகள் பிரிவு, தாபனப் பிரிவு, கணக்குகள் பிரிவு, சிறு வயது நட்டஈட்டு அலுவல்கள் மற்றும் காப்புறுதி உரிமப்பத்திரப் பிரிவு போன்றவற்றை உள்ளடக்கி உள்ளது.

வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற செயல்முறைக்கு குற்றவியல் வழக்குக் கோவை, சிவில் வழக்குக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச் சட்டம் ஏற்புடையதானவை என்பதுடன், மேன்முறையீட்டு நடவடிக்கை முறையானது மாவட்ட நீதிமன்றத்திற்கு சமமானதாகும்.

### தொலைநோக்கு

காயம் அல்லது மரணம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பணியாளர்களுக்கு விரைவாக நட்டஈட்டினைச் செலுத்தும் வகையில் தொழில்தருநர்களை ஆக்கி பணியாளர் திருப்தியை உருவாக்குதல்.

### செயற்பணி

பணிபுரிகையில் காயம், மரணம் அல்லது நோய் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் வேலையாளர்களுக்கு அல்லது தங்கியிருப்பவர்களுக்கு விதித்துரைக்கப்பட்ட நட்டஈட்டினைச் செலுத்துவதற்கு நீதிமன்ற நடவடிக்கைமுறைகளை ஆரம்பித்தல் மற்றும் தொழில்தருநர்களை மேற்கொள்ளச்செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

### பிரதான குறிக்கோள்கள்

வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக்களில் காயமடைகின்ற வேலை யாளர்களுக்கு, தொழிலின் தன்மைக்கு அமைய ஏற்படக்கூடிய நோய்களினால் பாதிக்கப்படுகின்ற வேலையாளர்களுக்கு மற்றும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இடம்பெறுகின்ற விபத்துக் களினால் உயிரிழக்கின்ற வேலையாளர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுத்தல்.

1934 ஆம் அண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரிடம் உரித்தளிக்கப்பட்டுள்ள பிரதான தத்துவங்கள் மற்றும் கடமைகள்.

1. அரச துறை மற்றும் தனியார் தறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவரின் இறப்பின்போது அவரில் தங்கியிருப்பவர். (இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 550,000/- ஆகும்)
2. இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்டஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
3. நட்டஈட்டுக் கொடுப்பனவை தெழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில்தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.
4. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.
5. பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பரிசோதனைகளை நடத்துதல்.

6. இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேயைாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்றவிடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

**2018.01.01 முதல் 2018.12.31 வரையான முன்னேற்றம் (நீதிமன்றங்கள் தொடர்பான விடயங்கள்)**

| தொழிற்பாடுகள் | 2018.01.01 – 2018.12.31 |
|---|---|
| தொழில்தருநர்களினால் முறையாக அறிக்கை செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை | 481 |
| விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2538 |
| இறுதிக் கட்டச் செயற்பாடுகளுக்கான நட்டஈட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 634 |
| பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 146 |
| உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துக்களுக்கெதிராக நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை (ரூபா) | 170,471,719.08 |
| நீதிமன்றங்களின் ஆணைப்படி அல்லது தன்னார்வ அடிப்படையில் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக தொழில்தருநர்களினால் வேலையாளர் களுக்குச் செலுத்தப்பட்ட தொகை (ரூபா) | 48,392,495.23 |
| பதிவுசெய்யப்பட்ட உடன்படிக்கைகளின்படி இறப்பை ஏற்படுத்தாத விபத்துக்கள் காரணமாக பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை (ரூபா) | 15,826,878.58 |
| உயிராபத்தை விளைவிக்கும் விபத்துக்கள் தொடர்பில் அறிவிடப்பட்டதன் பின்னர் பராயமடையாத தங்கியிருப்போர் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகை (ரூபா) | 26,382,495.65 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 155 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகள் அவர்கள் 18 வயதினை அடைந்ததும் மூடப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 170 |
| செலுத்தப்பட்ட மொத்தத் தொகை (ரூபா) | 17,777,343.37 |

**2018.01.01 இலிருந்து 2018.12.31 வரையான நிதிசார் முன்னேற்றங்கள்**

| விபரம் | 2018 ஆம் ஆண்டின் ஏற்பாடு (ரூபா மில்லியன்) | 2018 ஜனவரி 01 – டிசெம்பர் 31 வரையான செலவினம் (ரூபா மில்லியன்) | மீதி (ரூபா மில்லியன்) | செலவின் விகிதம் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 33,400,000 | 33,080,528.44 | 319,471.56 | 99.04 % |
| மூலதனச் செலவினம் | 3,850,000 | 498,867.50 | 3,351,132.50 | 12.96 % |
| மொத்தச் செலவினம் | 37,250,000 | 33,579,395.94 | 3,670,604.06 | 90.15% |

**சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்**

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் தொழிற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு குறுந்திரைப்படமொன்று தயாரிக்கப்பட்டதுடன், மேலுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நட்டஈட்டைக் கோருவதற்கான செயன்முறை 2018 டிசெம்பரில் நிறைவுசெய்யப்பட்டது.

# ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

இலங்கையில் இரண்டாவது பாரிய சமூகப் பாதுகாப்பு நிதியமான ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபை, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சட்ட ஏற்பாட்டின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன், 1981 மார்ச் 01 ஆம் திகதி செயற்பாட்டிற்கு வந்திருந்தது. இந்த நிதியமானது, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் நிருவகிக்கப்படுவதுடன், தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றது.

இந்நிதியத்தின் உறுப்பினர்களாக வருவது தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறையிலுள்ள பணியாளர்களின் பணிப்பாணையாகும். சட்ட எற்பாட்டு நியதிகளின்படி, தொழில்தருநர், பணியாளரது மொத்த உழைப்பின் மூன்று வீதத்திற்குச் சமமான தொகையொன்றினை மாதாந்தம் பணியாளர் தொடர்பில் செலுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தவராவார். மேலும், சுயதொழில் செய்வோர் மற்றும் குடிபெயர் வேலையாளர்கள் நிதியத்தின் தன்னார்வ உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிதியம், பணியாளர்களின் சுகாதாரம், வீடமைப்பு மற்றும் அவர்களது பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்குமாக 10 நன்மைபயக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

2018 டிசெம்பர் 31 இல், உறுப்புரிமைக் கணக்குகளின் எண்ணிக்கை 14.6 மில்லியனாகும். அதில், 2.6 மில்லியன் தற்போது உறுப்புரிமை உதவுதொகைகளைச் செலுத்திக்கொண்டிருக்கின் செயலுற வகைப்பாட்டின் கீழ் வருகின்றனர்.

தற்போது, ஊ.ந.பொ.நிதியச் சபை, தனது பாரம்பரிய அமைப்புசார் கட்டமைப்பின் கீழ் இயங்கி வருவதுடன், எதிர்காலத்தில் சக்திமிக்க நிதியமாக வருவதற்கு தீர்மானிக்கின்றது.

மேல் மாகாணத்தில் பெருகிவருகின்ற தொழில்தருநர்களின் பெரும்பான்மையானோர், ஊ.ந.பொ.நி. சபை மையப்படுத்திய நிறுவகமாக இயங்கிவருவதாக கருதியுள்ளனர். புதிய அபிலாசை களுடனான பிரதேசங்களில் மாவட்ட, பிரதேச அலுவலகங்களை தாபித்தமையும், பிராந்திய அலுவலக வலையமைப்பின் மீள்கட்டமைப்பு செயன்முறை நிறைவுற்றமையைத் தொடர்ந்து, தொழிற்பாட்டு மற்றும் சட்ட அலுவல்களில் விரைவான அபிவிருத்தியொன்று காணப்பட்டுள்ளது. தொடர்ந்து, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், நன்மைகள் கொடுப்பனவு மற்றும் உறுப்பினர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குதல் பரவலாக்கப்பட்டமை போன்ற அத்தகையவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஊழியர் நம்பிக்கைப் பெறுப்பு நிதியச் சபையின் தொழிற்பாடுகள், செயல்முறைசார் மற்றும் அதரவு சேவைகள் என்று இரண்டு வகைப்பாட்டிற்குள் பரந்தளவில் வகைப்படுத்தப்பட முடியும். உதவு தொகைகளைச் சேகரித்தல், தொழில்தருநர்களுடனான உறவுமுறைகள், உறுப்பினர்களுக்கான சேவைகள் மற்றும் முதலீடுகள் போன்றவை செயல்முறைசார் சேவைகளாக இனங்காணப்பட்டுள்ளன. நிருவாகம் மற்றும் மனித வளங்கள், நிதி, தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல் பகுப்பாராய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வு போன்றவை ஆதரவு சேவைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

**சபையின் முன்னேற்றம்**

| | 31.08.2018 (ரூபா மில்.) | | வேறுபாடு % |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டது | உண்மையானது | |
| உறுப்பினர்களின் நிதியம் | 278,500 | 281,125 | 0.94 |
| மொத்தச் சொத்துக்கள் | 305,868 | 312,088 | 2.03 |
| வருடாந்த வருமானம் | 30,316 | 29,127 | (3.9) |
| தேறிய இலாபம் | 24,090 | 23,325 | (3.8) |
| அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகளின் தொகை | 3,893 | 3,705 | 4.8 |

**நாடு முழுவதும் அமைந்துள்ள 19 பிராந்திய அலுவலகங்கள்**

1. கொழும்பு மாவட்ட அலுவலகம்
2. கொழும்பு 01-07
3. கொழும்பு 08 -15
4. கண்டி
5. கம்பஹா
6. மாத்தறை
7. காலி
8. அம்பாந்தோட்டை
9. களுத்துறை
10. இரத்தினபுரி
11. கேகாலை
12. குருனாகல்
13. அனுராதபுரம்
14. பதுளை
15. யாழ்ப்பாணம்
16. அம்பாறை
17. வவுனியா (புதிய பிராந்திய அலவலகம்)
18. நுவரெலியா (புதிய பிராந்திய அலவலகம்)
19. திருகோணமலை (புதிய பிராந்திய அலவலகம்)

**2018 டிசெம்பர் 31 இலுள்ளவாறு உண்மையான தொகைகளுக்கு எதிராக வரவு செலவு திட்டமிடப்பட்டுள்ள தொகை**

| செயற்பாடு | திட்டமிடப்பட்ட தொகை | உண்மையான தொகை | வேறுபாட்டு % |
|---|---|---|---|
| உதவுதொகைகளின் சேகரிப்பு (ரூபா.மில்.) | 25,320 | 25,256 | (0.25) |
| அறவீடுகள் (ரூபா.மில்.) | 268 | 351 | 30.1 |
| இணைய வங்கி முறைமையினூடாக உதவு தொகைகளைச் செலுத்துகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | 1276 | 1187 | 6.97 |

**சுகாதார நன்மைகள்**

01. நிரந்தர இயலாமைக்கான நன்மைகள் திட்டம் - ரூபா. 200,000
02. இருதய சத்திரசிகிச்சைக்கான நிதி மானியம் - ரூபா. 300,000
03. சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கான நிதி மானியம் - ரூபா. 300,000
04. கண் வில்லை மாற்றீட்டு சத்திரசிகிச்சை - ரூபா. 30,000
05. 'சிரமசுவ' மருத்துவமனைக் காப்புறுதித் திட்டம் - ரூபா. 50,000
06. இறப்பு நலன் திட்டம் - ரூபா. 100,000

**கல்விசார் நன்மைகள்**

01. ஊ.ந.பொ.நிதிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு தரம் 5 புலமைப்பரிசில் ஒவ்வொரு வருக்கும் தலா 15,000 ரூபா பெறுமதியான 9000 புலமைப்பரிசில்கள்

02. தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த நிரந்தரமாக அங்கவீனமுற்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குதல்.

உறுப்பினர்களின் க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வருக்கும் தலா 12,000 ரூபா வீதம் 5,000 பிள்ளைகளுக்கு வருடாந்த நிதி உதவி வழங்குதல
**வீடமைப்பு நன்மைகள்**

10. "வியன" குறைந்த வட்டி கடன் திட்டம்.
**வரவுசெலவுத்திட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான தரவு**

**உதவுதொகைகளின் கொடுப்பனவுகள்**

ரூபா.மில்லியன்

| மீள்கொடுப்பனவு | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| உதவுதொகைகளின் மீள்கொடுப்பனவு | 20,980 | 18,292 | 2,688 |
| உறுப்பினர்களுக்கான நன்மைகள் | 616 | 476 | 140 |
| **மொத்தம்** | 21,596 | 18,768 | 2,828 |

**நன்மைகள் கொடுப்பனவு**

ரூபா.மில்லியன

| நன்மைகளின் வகைப்பாடுகள் | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| இறப்பு நன்மைகள் | 120 | 97 | 23 |
| நிரந்தர இயலாமை | 14 | 6 | 8 |
| இருதய சத்திரசிகிச்சை | 216 | 161 | 55 |
| சிறுநீரக மாற்றுகைகள் | 8 | 3 | 5 |
| கண் வில்லை மாற்றீட்டு சத்திரசிகிச்சை | 9 | 3 | 6 |
| தரம் 5 புலமைப்பரிசில்கள் | 135 | 88 | 47 |
| உயர்தர புலமைப்பரிசில்கள் | 60 | 19 | 41 |
| ‘சிரமசுவ’ திட்டம் | 54 | 11 | 43 |
| **மொத்தம்** | **616** | **388** | **228** |
| ‘வியாபா’ வீடமைப்புத் திட்டம் | 300 | 94 | 206 |

\+ சாதகமான வேறுபாடு

\- சாதகமற்ற வேறுபாடு

**சபையின் முதலீடுகள் இரண்டு வகைப்படும்.**

**அரசாங்கம் நிலையான வருமான சாதனங்களைப் பெற்றுள்ளது.**

- திறைசேரி பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்
- நிலையான வைப்புக்கள்
- தேசிய அபிவிருத்தி வங்கியின் ‘வியன’ வைப்புக்கள்

**பங்குகளின் முதலீடுகள்**

- பட்டியலிடப்பட்ட பங்குகள்
- தொகுதிக் கடன்கள் மற்றும் அலகு நம்பிக்கைப் பொறுப்புகள்

**2018 டிசெம்பர் 31 இலுள்ளவாறு முதலீட்டுப் பிரிவு (ரூபா மில்.)**

(ரூபா.மில்.)

| முதலீட்டின் வகை | பெறுமதி | ஆதனம் % |
|---|---|---|
| திறைசேரி பிணைமுறிகள் (7.43% முதல் 14.38%) | 218,961 | 75.1 |
| நிலையான வைப்புகள் சாதாரண சேமிப்புகள் | 55.476 | 19.0 |
| தொகுதிக் கடன்கள் | 2.565 | 0.9 |
| பிணைமுறிகள் (கறவலப்பிட்டி – 12.30%) | 1,743 | 0.6 |
| தேறிய பெறுமதி மீதான பங்குகள் | 11.660 | 4.0 |
| அலகு நம்பிக்கைப் பொறுப்புகள் மீதான பங்குகள் | 233 | 0.1 |
| ஏனைய முதலீடுகள் (வியண வீடமைப்புத் திட்டம்) | 1.027 | 0.4 |
| **மொத்தம்** | **291,665** | 100 |

**லங்கா உப்புக் கம்பனியில் முதலீடு**

இலங்கை உப்புக் கம்பனியின் 90% ஆன சாதாரண பங்குகளின் உரிமைத்துவம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் 452 மில்லியன் ரூபாவுக்கு 1997.01.24 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொள்வனவு நிதி அமைச்சுக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்குமிடையிலான கொள்வனவு மற்றும் விற்பனை உடன்படிக்கைகளினூடாக பரிமாற்றப்பட்டிருந்தது.

2018 **ஓகஸ்ட் 31 இலுள்ளவாறு முக்கியமான நிதித் தரவுகள்**

(ரூபா.மில்.)

| | திட்டமிடப்பட்டது | உண்மையானது | வேறுபாடு |
|---|---|---|---|
| முதலீட்டு வருமானம் | 2,998 | 28,708 | (1,273) |
| ஏனைய வருமானம | 335 | 418 | 83 |
| பதவியினர் செலவீனம் | 1.100 | 1.115 | (15) |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | 248 | 199 | 49 |
| உறுப்பினர்கள் செலவீனம் | 985 | 783 | 202 |
| **தேறிய இலாபம்** | 3.893 | 3.705 | 188 |
| முதலீட்டு வருமானம் | 24,090 | 23,325 | (766) |

**முக்கிய செயலாற்றுகைச் சுட்டிகள் - 2018 டிசெம்பர் 31 இலுள்ளவாறு**

| | டிசெம்பர் 2017 | டிசெம்பர் 2018 |
|---|---|---|
| முதலீடுகள் மீதான இலாபம் | 9.00 | 10.30 |
| மொத்த நலன்கள் (ஏனைய வருமானம் உள்ளடங்கலாக) | 9.18 | 10.48 |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | 0.47 | 0.49 |
| உறுப்பினர்கள் செலவீனம் | 0.28 | 0.30 |
| மொத்தச் செலவீனம் | 0.76 | 0.79 |
| முதலீட்டு வீதத்தின் மீதான தேறிய இலாபம் | 8.42 | 9.69 |

**குறுகிய காலத் திட்டங்கள் -2018**

உதவுதொகைகளின் சேகரிப்பினை அதிகரித்தல் 12%
முதலீட்டு வருமானத்தை அதிகரித்தல் 10%
உறுப்பினர்களின் நிதியத்தை அதிகரித்தல் 12%

**2018.01.01 இலிருந்து 2018.12.31 வரை நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

தகவல் முறைமை விண்ணப்பத்தை (EISA) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. உதவுதொகைகளைச் சேகரிப்பதனைச் செம்மைப்படுத்துவதற்காக பரிசோதனைத் துறையினை விரைவுபடுத்தும் நோக்கில் சர்வதேச தொழில் தாபனத்தின் ஒத்துழைப்புடன், நிதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நிதி உதவியுடனான ஊ.ந.பொ.நி தகவல் முறைமை விண்ணப்பம் (EISA கருத்திட்டம்).

இணையத்தினூடாக தொழில்தருநர்களினால் உதவுதொகைக் கொடுப்பனவினை இலகுபடுத் துவதற்கும் உதவுதொகைகள் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பிப்தற்கும் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்துதலும் நடைமுறைப்படுத்துதலும்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பரந்த சேவையினை வழங்கும் குறிக்கோளுடன் பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கு கம்பஹா, வவுனியா மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்து காணிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வினை மீளமைத்தலும் சபைக்கு இடர் முகாமைத்துவ செயன்முறையை அறிமுகப்படுத்துதலும்.

தேசிய அடையாள அட்டையினதும், ஊ.ந.பொ.நிதியத்திற்கான பிரத்தியோக இலக்கத்தினதும் அடிப்படையில் உறுப்பினர்களை மையப்படுத்திய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்துடனும், தொழில் திணைக்களத்துடனும் ஒத்திசைவு உடன்படிக்கையொன்று ஒப்பமிடப் பட்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் உதவியுடன் உற்பத்தித்திறன் எண்ணக்கருவினை அறிமுகப் படுத்துதலும் உற்பத்தித்திறன் கைந்நூலினைத் தயாரித்தலும்.

மனித வளங்களின் அபிவிருத்திக்காக அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன், வெவ்வேறு மட்டத்திலுள்ள பணியாளர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைச் செம்மைப்படுத்து வதற்கு பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சங்க உறுப்பினர்கள் தமது உரிய துறைகளில் பயிற்சி எடுப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வெளி வளங்கள் மற்றும் வெளிநாட்டு நன்கொடை முகவர்களின் ஒத்திசைவுடன் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுடன், இதன்படி, சபையின் 46 அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு தரம் 5 புலமைப்பரிசில் வைபவங்கள் நடத்தப்பட்டிருந்தன - பதுளையில் 2018.04.04 ஆம் திகதியிலும், V2025 தொழில்முயற்சி இலங்கை கண்காட்சிக்கு சமானமாக 2018.08.31 ஆம் திகதியில்.

# சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சபைச்சட்டத்தின் கீழ் பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்றதொரு நிறுவனமாகத் தாபிக்கப் பட்டிருந்தது. சட்டத்தில் வரையப்பட்டுள்ள சபையின் 06 குறிக்கோள்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக எண்ணிக்கையிலான சேமநலன் நடவடிக்கை களை ஆரம்பித்திருந்தது.

“சிரம வாசனா நிதியத்தின்” நிதியின் பிரதான மூலம் தேசிய லொத்தர் சபையின் ‘ஜாதிக்க சம்பத லொத்தர்’ ஆகும். ஜாதிக்க சம்பத லொத்தர் விற்பனை அதிகரித்ததுடன், பணியாளர்களின் சேமநலனுக்காக விரிவான சேவை ஏற்பாட்டினை மேற்கொண்டு பரந்துபட்ட வளர்ச்சியொன்றிற்கான சாட்சியியை நிதியம் கொண்டிருக்கின்றது.

**சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்**

i. வேலையாளர்களுக்கான சேமநலனை மேம்படுத்துதல்.
ii. பணியாளர்களுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படாது வேலைத்தளங்கள் மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
iii. அவசரகாலத்தின்போது மருத்துவ வசதிகள் மற்றும் ஏனைய உதவிகளை பணியாளர்களுக் வழங்குதல்.
iv. பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றபோது பணியாளர்களுக்கு தற்காலிக நிவாரணங்களை வழங்குதல்.
v. பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு வயோதிப காலத்தில் நிதி உதவிகள் மற்றும் ஏனைய வடிவிலான உதவிகளை வழங்குதல்.
vi. வேலையாளர்களின் சேமநலனுக்கு அதிகளவிலான பங்களிப்பினை நல்கியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

**நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்கு | | 2018.01.01 – 2018.12.31 வரையான எதிர்பார்க்கப்பட்டஇலக்குகள் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி (ரூ.மில்.) | பௌதீகம் | நிதி (ரூ.மில்.) |
| 1 | மருத்துவ கிளினிக் மற்றும் முகாம் | 9 | 5.5 | 9 | 4.9 |
| 2 | வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 5 | 2.5 | 4 | 2.3 |
| 3 | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 53 | 1.29 | 55 | 1.15 |
| 4 | நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | 4 | 8.04 | 8 | 7.84 |
| 5 | வாழ்க்கைத் தொழில் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 12 | 0.36 | 1 | 0.01 |
| 6 | செயற்கை உறுப்புகளை வழங்குதல் | 30 | 3.5 | 12 | 2.5 |
| | • சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம் | 50 | 1 | 16 | 0.5 |
| | • சட்ட உதவி மேன்முறையீடுகள் | 5 | 0.25 | 3 | 0.09 |
| 7 | மருத்துவ நிவாரணம் | 25 | 0.25 | 2 | 0.2 |
| 8 | புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | 100 | 6 | 51 | 3.96 |
| 9 | இயற்கை அனர்த்தம் மீதான நிகழ்ச்சித்திட்டம் | 50 | 2.3 | 1 | 1.69 |
| 10 | மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் / தொலைக்காட்சி விளம்பரங்கள் | 20 | 3.2 | 20 | 2.84 |

# அமைச்சின் விசேட செயற்பாடுகள்



"பீபிதெமு பொலநறுவை" நிகழ்ச்சித்திட்டத்தில் சிரம வாசனா நிதியத்தால் பாடசாலை உபகரணங்கள்



பதுளை நடமாடும் சேவையில் வேலையாளர்களுக்கான நட்டஈடு வழங்கப்படுகின்றது



ஹட்டனில் தொழில் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டப்படுகின்றது



கொக்கல்ல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் அவதானிப்பு சுற்றுலா



கொழும்பில் நடைபெற்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய மாநாடு



அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் கூட்டம



சிரம வாசனா நிதியத்தால் டிப்புளோமா சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன



ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் மொனாறாகலை "V 2025" கண்காட்சியில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.



கொரிய குடியரசின் மனிதவலு திணைக்களத்தின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்புத் திணைக்களத்தினால் குருணாகலில் தொழில் நிலையம் அங்குரார்ப்பணம்



ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் அம்பாந்தோட்டை லங்கா உப்புக் கம்பனிக்கு அவதானிப்பு சுற்றுலா



மொனறாகலை மாவட்டத்தில் நடைபெற்ற 'ஏன்ரபிறைஸ் ' இலங்கை கண்காட்சிக்கு இணையாக பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் பணியாளர்களின் இருதய சத்திரசிகிச்சைக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபையினால் நிதி உதவி அளிக்கப்படுதல்.



அம்பாறையில் சுற்றுலா பங்களா அங்குரார்ப்பணம்